www.padippakam.com

# கணையாழி

மிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

ப்டம்பர், 1992 விலை ரூ. 3.



படிப்பகம்

www.padippakam.com

# புரட்சிக் குயில்

அறியாமையும் மூடப் பழக்கங்களும் மலிந்த சமுதாயத்தில் நியாயங்கள் யாவும் புரட்சியாகவே தோன்றுவது இயல்பு. ஆனால் அவை விழிப்புற்ற சமுதாயத்தில் இயல்பான கருத்துக்களாய் ஏற்கப்பட வேண்டியவையே.

அடிமைப்பட்டுக் கிடந்த பாரதத்தில் பாரதியாரின் செயல்களும் சொற்களும் புரட்சி முழக்கங்களாகவே வெளிப்பட்டன. அவற்றுள் பெரும்பாலன இன்று நடைமுறைகளாய் மாறி வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்; கைகூப்பி வரவேற்கிறோம். பாரதியார் ''சாதிகள் இல்லையடி பாப்பா,'' என்றார். தமிழ் மூதாட்டியார் ஔவையாரின் வாக்கு இதுவே எனினும், விடுதலை பெறாத நாட்டில் பாரதியாரின் முழக்கம் புரட்சியாக எதிரொலித்தது. இன்றோ, நடைமுறையாகிவிட்டது. அதுபோலவே அவர் சொன்ன கருத்துகள் அனைத்தும் நடைமுறைகளாக வேண்டும். இல்லையேல் நாம் வளரவில்லை என்பது பொருளாகும்.

பாரதியார் தமக்குத் தாமே ஒரு புரட்சியாளர்; சாதி வேறுபாடுகளை அறவே ஒதுக்கியவர். தம்முடைய பூணூலை அறுத்தெரிந்த அவர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்குப் பூணூலை அணிவித்ததுண்டு. அவர் பெண்டிர் விடுதலையைப் பற்றி ''ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமே!'' என்று வீர முழக்கமிட்டார். அதுவும் இன்று நடைமுறைக்கு வந்து கொண்டுள்ளது. அவர் தமக்கு ஞானகுருவாக சகோதரி நிவேதிதையாரை தேர்ந்து கொண்டார். விவேகானந்தரின் அறப்புதல்வியரான அவர் பாரதியாரைப் பெரிதும் கவர்ந்தார். ஒரு பெண்ணை ஞான குருவாக, பாரதியாரைப் போல யாரும் தேர்ந்தெடுத்ததில்லை. பாரதியார் அப்புரட்சியைப் புரட்சியென்று கருதாமலே தம் நெஞ்சின் ஆணையாக ஏற்றுக்கொண்டு செய்தார். பெண்டிர் மனித குலத்தில் சரிபாதி. அவர்களை அடிமைப்படுத்தி விட்டால் சுதந்திரம் என்பது பித்தலாட்டமாகும்.

கல்வியைப்பற்றிப் பாரதியார் அழகாகப் பாடினார்.

'சோலைகள் உருவாக்கு நல், சுனைகள் இயற்றல், அன்ன சத்திரம் ஆயிரமாயிரமாகக் கட்டுதல், ஆலயங்கள் பதினாயிரம் கட்டுதல், மற்றும் உலகிலுள்ள அறச்செயல்களெல்லாம் ஒருவன் தன் பெயர் விளங்கும்படி செயல் புரிதல் போன்றவற்றைக் காட்டிலும், ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே புண்ணியமான செயல்' என்று அற்புதமாகச் சொல்லக்கூடிய திறன் அந்தப் புரட்சிக் கவிஞருக்கே உண்டு.

படிப்பகம்

www.padippakam.com

கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

செப்டம்பர், 1992

மாதத்தின் முதல் வாரத்தில் வெளிவருகிறது.

தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.
சந்தாவை M.O செய்க.

மனித நேயம் வளர்க்கும் இலக்கியத் தெளிவின் ஊற்றுக்கண்.

படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:
ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்
சென்னை-600 019.

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை 580, T.H.Road, சென்னை-21இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல்பிரஸ், 31, T.K.S.நகர் சென்னை-19இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்.

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப் பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

இதழ் பற்றிய உங்கள் மதிப்பீடுகளும் இதழுக்கான உங்கள் சந்தாவும் உங்கள் இலக்கிய வேட்கையின் வெளிப்பாடுகளாகட்டும். செயல்படுக.



# அன்புடையீர்!

## அடுத்து வரும் இதழ்

# ஆண்டு மலர்

**அதிகப் பக்கங்கள்**
**அதிகப் படைப்புகள்**
**அதிகமாகாத விலை**

**இதழ் துவக்கப்பட்ட அதே நாளில்**

**அக்டோபர் 21இல்**
**இதழ் விரித்து மணக்கும்**

**ஆரம்ப காலச் சந்தாதாரர்கள் உடனடியாகச் சந்தாவை அனுப்புங்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

# காதல் நினைவு

ஆசிரியர் பக்கம்

நெஞ்செனும் வீணையினை—அவள்
நினைவெனும் மலர்க்கரம் தழுவையிலே
அஞ்சிலம் பதிரவந்தே—என
தாவியில் மேவிடும் ஆருயிராள்.
செஞ்சுடர்ப் பரிதியளாம்—நறுஞ்
சீதளத் தாமரைச் சிரிப்பினளாம்.
விஞ்சையர் எழிலமுதாம்—இள
வேனிலின் தேனலக் காவியமாம்.

காதலின் பெயரினள்காண்—அவள்
கனிச்சுவை மழலையும் செந்தமிழாம்.
போதினை அவிழ்ப்பவள்காண்—அதில்
பூவிழை சுரும்பினைப் புதைப்பவள்காண்.
வேதனைக் கடலினிலே—அவள்
விழித்திறன் கலங்கரை விளக்கங்களாம்.
மாதவள் நினைவினிலே—இந்த
மானிலம் எனக்கொரு சிறுதுரும்பாம்.

உண்மையின் கருப்பொருளாய்—முலை
யூறிடும் அமுதின்நல் உயிர்ச்சுவையாய்,
பெண்மையின் நிறைகுடமாய்—வெறும்
பொய்மையின் இருளிலோர் சுடர்விளக்காய்,
கண்மலர்க் கருமணியாய்—உயிர்
கவரும்நல் ஓவியத் திருநிறமாய்,
பண்ணமை இலக்கியமாய்—இந்தப்
பாரினை நிறைத்தெழில் படைப்பவள்காண்.

அஞ்சனக் கண்களினால்—கணை
ஆயிரம் பெய்தருள் செய்திடுவாள்.
பஞ்சினும் மெல்லியள்காண்—அவள்
பாதங்கள் பயில்வதும் பரதமன்றோ!
துஞ்சிடும் மானிடரே!—விழி
திறந்தவள் வருகையைப் பருகிடுவீர்.
வஞ்சனை நினைவொழிவீர்—அவள்
வரவிலும் உறவிலும் வளம்பெறுவீர்.

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

கவிதாசரண்
தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் ஒன்று செப்டம்பர், 1992 இதழ் பதினொன்று

விவாத சிந்தனை

# தமிழுண்ணிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

நண்பர் தர்க்க ரீதியாக, அருவி மாதிரி தம் எண்ணங் களைப் பொழிந்தார்:

''என்றைக்குத் 'தமிழ் எங்கள் உயிர்' என்று அறைகூவி னார்களோ, அன்றைக்கே, அதனை உயிராக வளர்த்து, உர மிட்டு மேம்படுத்தியிருக்க வேண்டும். அதற்குச் சாதகமாகவே தமிழ் மக்களும், 'தமிழ் வாழ்க' என்று சங்க நாதம் புரிந்தவர்க ளையே ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தினார்கள். 'ஜில்லா, தாலுகா, பிர்க்கா' என்று பழக்க தோஷத்தால் புலம்பிக் கொண்டு, அடிப்படையில் தமிழானாயிருந்த ஒரு பரம்பரை யையே துடைத்தெறிந்துவிட்டு, 'வட்டம், மாவட்டம், வாரியம், ஒன்றியம்' என்று கன்னல் தமிழில் சொல்லப் பழகியவர்களைத் தலைமை தாங்க அழைத்தார்கள்.

''நடந்ததென்ன? கோஷத்திற்கு மட்டும் தமிழாகச் சுருங்கி, ஆங்கில மோகம் இரு மடங்காகப் பெருகி, அடாவடித்தனங்க ளும் கோயபல்ஸ் குப்பைகளும் வெள்ளப் பெருக்காய் வளர்ந்தது தான் மிச்சம். சமூகப் பொறுப்பும், ஜீவாதாரக் கொள்கைகளும்

படிப்பகம்

www.padippakam.com

மூர்க்கமான செயல் திட்டமும் இல்லாதவர்களின் கட்சியரசியல் வெள்ளத்தில் நாம் துரும்புகளாய்ச் சிறுத்துப் போனோம்.

''உண்மை சுடும் என்பதற்காக நாம் எத்தனை காலத்திற்குக் கண்ணாமூச்சி விளையாட்டில் காணாமல் போய்க் கொண்டிருப்பது? கழகத்தவரின் 'திராவிட நாடு திராவிடருக்கே!' என்ற கொள்கை ஒரு சிறு அச்சுறுத்தலில் பரணேறிக் கொண்ட போதே 'இந்தி ஒழிக' எனும் கோஷத்தையும் சுருக்கிக் கொண்டிருக்க வேண்டும். திராவிட நாடு என்னும் ஜீவாதாரக் கொள்கையை விட்டொழித்தமைக்காகப் பச்சாதப்பட்டு வழங்கிய பிச்சைதான் அல்லவா, 'இந்தி பேசாதவர்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும்' என்ற உறுதிமொழி? இதன் ஆயுள் அற்பத்திலும் அற்பம் என்பதைக் கண்டு கொள்ள கை விளக்கா தேவை? நாம் தமிழையும் வளர்க்கவில்லை; இந்தியையும் படிக்கவில்லை. முகமில்லாமல், மொழியில்லாமல் சாகவா வரம் வாங்கி வந்தோம்?

''இதே காலகட்டத்தில் இந்திய மொழிகள் அனைத்துமே தங்களைச் செழுமைப் படுத்திக் கொண்டன. அந்தந்த மாநிலங்களில் ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவும் மேம்பட்டு நிற்கின்றன; தம் மக்களை இந்திய நீரோட்டத்தில் இரண்டறக் கலந்தோடி, இந்திக்காரர்களால் எவ்விதத்திலும் தவிர்க்க முடியாதவர்களாய் நிமிர்த்தி, வளர்ந்துள்ளன. திராவிட மொழிகள் என்பன 'தமிழோடு எங்களுக்கு சம்பந்தமில்லை' என்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்கின்றன. தமிழ் தவிர, பிற இந்திய மொழிகள் அனைத்திலும் சமஸ்கிருதத்தின் தாக்கம் உணரப்பட்டு, வரவேற்கப்பட்டு செழுமைப் படுத்தப்பட்டு, ஒரு பொதுவான ஊடிழையாக இணைக்கப் படுகின்றன. இதில் எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் நாம் காலம் தள்ளுகிறோம். யாருக்காக? யாரைக் காக்க? யாரைக் காவு கொடுக்க?

''இன்று இந்திய அரசியலைப் பாருங்கள். ஒரு தெலுங்குக் காரர் பிரதமராயிருக்கிறார். ஒரு கன்னடக்காரர் பாராளுமன்றத் தலைவராய் இருக்கிறார். மொழி பற்றிய எந்த உரசலும் இல்லாமல், இயல்பாய், சமத்துவமாய். ஒரு தமிழன் இந்த நிலையை அடைய எப்போதாவது வாய்ப்பிருக்கிறதா? மொழி உரசல் இல்லாமல், இயல்பாய், சமத்துவமாய். ஆனாலும் நாமும் இந்தியர்கள்தாம். குடியரசுத் தலைவராக ஒரு தமிழன் வருவதுகூடக் கடைசிப் பட்சமாகத்தான்.''

தெரிந்த விஷயங்கள்தாம் எனினும் நண்பரின் விவேகமான கோர்வையில் தமிழர்களுடைய கையறு நிலையின் தீவிரம் ஒரு திடுக்கீடு போலவே, தீச்சுடல் போலவே அதிர வைத்தது.

படிப்பகம்

www.padippakam.com

நண்பர்மேலும் தொடர்ந்தார்:

''நண்பரே, சென்றமுறை நீங்கள் தமிழ் பற்றிப் பேச வந்த போது, நான் உங்களைப் பற்றிப் பேசச் சொன்னேன்; உங்கள் வளர்ப்பைப் பற்றிக் கேட்டேன். உங்களை நான் அறிந்தவனாகவே கேட்டேன். உங்கள் பலமாய் இருக்கும் செயல்பாடுகளே, சிறு மாற்றுப் பார்வையில் உங்களுக்கெதிரான குற்றங்களாக சாட்சியமாகலாம் என்றுகூடச் சொன்னேன். அதை உங்களை மட்டும் நினைத்துச் சொல்லவில்லை. இந்தத் தமிழ் நாட்டையும் மனத்தில் கொண்டுதான் சொன்னேன். இந்த ஒப்பிடலுக்கு நீங்கள் ஒரு நல்ல உதாரணமாகக் கிடைத்தீர்கள்.

''நீங்கள் ஓர் உத்தமமான தாயின் புதல்வர். உத்தமமான மகனாகவும் செயல் பட்டீர்கள். அதே நேரத்தில் ஊரோடும் உறவோடும் ஒட்டாமல் ஒதுங்கி நிற்கவும் முயல்கிறீர்கள். அதிக பட்ச உறவு விமர்சனங்களையும் எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தும் என்று கருதுகிறீர்கள். அதனால் தனிமனிதச் சிந்தனையின் நேர்மை பாதிக்கப்படும், புழுதியில் ஒளி மழுங்கும் என்று உணர்கிறீர்கள்.

''உண்மையாகவே இருக்கட்டும். நீங்கள் ஒரு தனி நபர். உங்கள் ஒதுக்கத்தால் சில நஷ்டங்களுக்காளாவீர்கள். அந்த நஷ்டங்களை உங்கள் ஆழப்பார்வையில், தொடர் சிந்தனையில், இலக்கியம் பரப்பும் உங்கள் நிஜ உலகில் வரவாகவே எழுதிக் கொள்ள முடியும். ஆனால், ஒரு மாநிலமே அப்படித் தீவாக நின்றுவிட்டால் என்னாகும்? ஒன்று அது இறையாண்மையுள்ள அரசாக இருக்கவேண்டும். இல்லையேல் தாய் நிலத்தோடு பாலம் கட்டி இணைக்க வேண்டும். இரண்டுங் கெட்டானாய் இருப்பதன் விளைவென்ன? தமிழன்னை உங்கள் அன்னையைவிட ஆயிரம், பல்லாயிரம் மடங்கு உயர்ந்தவள். மனிதப் பூண்டை முதல் பயிராக வளர்த்தவள் என்றே நாம் நம்புகிறோம்! இந்தப் பாரம்பரியப் பெருமைதான்—'முன்தோன்றி மூத்த குடி' என்னும் ஆதிநாதம்தான் நம்மை அடுத்தவர்களோடு சமன்தையாக்கிக் கொள்ள மறுக்கும் சமுதாயப் பலவீனமாக வளர்ந்துள்ளதோ! இதுபோன்ற ஒரு சூழலில் மூல முதலாய் வடிவெடுத்த தமிழன்னை தன் பிள்ளைகளுடன், இந்தப் பெரிய தேசத்தில், தெற்குக் கோடியில், துண்டித்துப் போட்ட ஓர் உறுப்பு போல, தீப் புனலால் சூழப்பட்ட தீவு போலத் தனிமைப்பட்டு நின்றால், அடுத்து என்னாகும்?

''ஒரு தலைமுறைக்கு முன் நம்மில் சிலர் ஏதோ கிளர்ச்சியூட்டும் புதிய அறை கூவலாக இருக்கட்டுமே என்று போட்ட கோஷத்தைத் தமிழ் மக்கள் வீர முழக்கமாக நம்பிச் செயல்பட்டதன்— செயல் படாமல் போனதன் பலாபலன்களை மறுபரி

படிப்பகம்

www.padippakam.com

சீலனைக் குட்படுத்தாமல் எத்தனை நாளைக்கு இப்படியே மௌனமாய்ப் பயணிப்பது?

''இந்தக் குளறுபடியான கால கட்டத்தில் தமிழாசிரியர்கள் நிலை இன்னும் பிடிபடாமலேதான் போய்க் கொண்டிருக்கிறது. சட்டப்படி நாங்கள் பிற ஆசிரியர்களோடு சமமாகப் பாவிக்கப்பட்டாலும் 'ஆங்கில மோகம்' என்னும் மனோபாவம் எங்களைப் பாதித்திருப்பது போல் யாரையும் பாதித்திருக்க முடியாது. ஆசிரியர்கள் மத்தியில் மட்டுமல்ல—படித்த, படிக்காத எல்லா மக்களின் மத்தியிலும், 'எல்லாருக்கும் தெரிந்த தமிழ் தவிர இவர்களுக்கென்ன தெரியும் பாவம்' என்னும் ஒரு மனோபாவம் இருக்கிறது. தமிழாசிரியர்களிடத்திலும் ஒரு ரகசிய நோய் போல 'நமக்கு வேறு என்னதான் தெரியும்,' என்னும் ஒரு தாழ்வுணர்ச்சி குறுகுறுத்துக் கொண்டே இருக்கிறது.

''இப்படிபட்டதொரு, 'பேச்சில் பிடி கொள்ளாத உளவியல் மாச்சரியங்களால்' மொழியாசிரியர்களுக்கும் பிற துறையினருக்குமிடையே கருத்தொற்றுமையும், ஒருங்கிணைப்பும் உருவாகவும், மொழி இயக்கமாய்ச் செயல்படவும் முடியாமல், ஒரு பள்ளம் ஏற்பட்டுவிட்டது. பள்ளத்தின் உள்ளே நிற்பவர்கள் தமிழாசிரியர்களாகவும், மேலே நிற்பவர்கள் பிறதுறை சார்ந்தவர்களாகவும், சமன் செய்யப்படாத தளக்கோணல் இடைநிறுத்தப்பட்டு விளையாட்டு காட்டிக் கொண்டிருக்கிறது. பள்ளத்தில் நாங்கள் நிற்பதால் எங்கள் பார்வைக்கு எல்லை விழுந்து விட்டதுபோல் ஒரு தோற்றம். மற்றவர்கள் மேட்டில் நிற்பதால் அவர்களுக்கு வானம்கூட நடைபழகும் நிலமாகத் தாழ்ந்து விட்டதாக ஓர் இறுமாப்பு. இந்தப் பூசலில் தாழ்ந்து போனவர்கள் தமிழாசிரியர்களாய்க் கணிக்கப்படுகிறார்கள். அறிவியல் வெள்ளத்தில் கரை ஒதுங்கும் நுரைகளாய் மொழியாசிரியர்கள் கணிக்கப் படுகிறார்கள். ஆகவே மொழி பற்றிய புதிய உருவாக்கங்கள் ஓர் இயக்கமாய் இல்லாமல் அக்கறை கொண்ட தனி நபர்களின் தன்னார்வச் செயலாக வெளிப்படுவதுதான். அதனாலேயே பல விஷயங்களில் நாம் பின் தங்கிவிட்டோம் என்று படுகிறது.''

''இத்தனைக்கும் மொழியையும் மொழியாசிரியர்களையும் ஒதுக்குவது போன்ற நடைமுறைச் செயல்கள்தான் என்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''சந்தேகமில்லாமல் அடிப்படை அதுதான். 'நம்முடைய எந்திர நாகரிகம் நமக்கு எல்லாவற்றையும் கற்றுக் கொடுக்கும், மனிதனாயிருப்பதைத் தவிர' என்று ஒரு அறிஞன் சொன்னது எவ்வளவு பெரிய உண்மை! மனிதனை மனிதனாக மேன்மைப் படுத்தும் சாதனம் மொழிதான். மொழியில் கதை, கவிதை,

படிப்பகம்

www.padippakam.com

நாடகம் எனப் பல வடிவங்கள் உள்ளன என்பது நமக்குத் தெரியும். ஆனால் அவை மட்டும்தானா? நமது எண்ணங்கள், கனவுகள், நினைவுகள்—இவைகளும்கூட மொழியில்தான் கட்டப்படுகின்றன அல்லவா. சொல்லப் போனால் நம் மனோ வியாபகமே மௌனமாய்ப் பெருகும் மொழி இழைகளின் நீட்சிதான் அல்லவா! மனித வளர்ச்சியில் மொழி என்னும் ஊடகம் ஒரு யுகாந்திரப் பரிணாம வளர்ச்சியாக, எல்லா வளர்ச்சிகளுக்கும் அடித்தளமாக, அதே சமயம் எல்லா உணர்ச்சிகளுக்கும் மூச்சு இழையாகக் கலந்துவிட்டது.

"பண்பாட்டின் ஊற்றுக்கண்ணாகவும் கலாச்சாரப் பலகணியாகவும் இலக்கியச் சுரங்கமாகவும் ஆதர்சப்படுத்தக் கூடியது மொழி மட்டுமே. அப்படிப்பட்ட மொழியொன்றே மனிதனை மேன்மைப் படுத்தும். இதனைக் கல்வித் துறை எப்போதாவது யோசித்ததுண்டா? கல்வி பற்றிய மதிப்பீடும் திட்டமிடலும் சுதந்திரமான கல்வியாளர்களின் பரிந்துரையில் இருந்தால் இது சாத்தியமாகலாம். அறிவாளிகள் அரசியல்வாதிகளுக்கு நெடுஞ்சாண் கிடையாக முதல் வணக்கம் சொல்ல வேண்டிய சமூகத்தில் கல்விக்கு என்ன மரியாதை இருக்கிறது? காகிதம் தின்னத் தெரிந்த ஒரு காரணத்துக்காகவே கழுதைகள் கூடக் கல்விமான்களாய் வேஷம் கட்டியாடும் காலம் இது. மொழியை வளர்ப்பது, பேணுவது, பராமரிப்பது என்பதெல்லாம் கூட 'வயிற்றுப் பாட்டுக்கு' என்னும் கொள்கையை முன்னிறுத்தும் பாமரக் கைகளுக்கல்லவா போய்விட்டன.

"இப்போது கல்வி நிலையங்களில் என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? கல்வியைத் தொழில் முறையாக்கும் நோக்கில் மொழிப் பாடத்திற்கான நேரத்தைச் சுருக்கிவிட்டார்கள். வயிற்றை முன் நிறுத்துவது தொழிற் பயிற்சி; வாழ்வை முன் நிறுத்துவது மொழிப் பயிற்சி என்னும் சுரணையே போய்விட்டது. வாழ்க்கை என்பதே வயிற்றுப் பாடுதான் என்றாகிவிட்டது. மொழிப் பாடத்திற்கு அதிக நேரம் ஒதுக்குவது வியர்த்தம் என்று எப்போது இவர்களுக்குப் பட்டுவிட்டதோ, அப்போதே மனிதனாயிருப்பதும் வியர்த்தம் என்பது இவர்கள் மனதில் எழுதப்பட்டிருக்க வேண்டும். பிறகேன் இப்போது திசை மாறி சீறிப் பொங்கும் இளைய தலைமுறையைக் கண்டு திகைக்கிறார்கள்? உலகம் தழுவிய அளவில் இளைஞர்களிடையே பயங்கரவாதம் பெருகிவிட்டதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். அதில் ஒரு முக்கிய காரணம் மொழியைத் தளமாக வைத்து மனித மேன்மை பேசும் இலக்கியம், பண்பாடு, கலை, கலாச்சாரம் போன்ற உணர்வு நுட்பங்களைப் பாடத்திட்டத்தில் புறக்கணித்ததும் ஆகும்."

படிப்பகம்

www.padippakam.com

''நீங்கள் சொல்வது ஒரு பாதி உண்மை,'' என்றேன்.

''மறுபாதி என்னவாம்?'' என்று கேட்டார்.

''கல்விச் சீர்கேட்டோடுகூட, இளைஞர்கள், நடைமுறையில் பின்பற்றக் கூடிய தகுதியில் பழைய தலைமுறை பழக்கிக் காட்டாமல் போனதும் முக்கிய காரணம். மனித மேன்மை என்பது கட்சி அரசியலில் கரைந்தே போய்விட்டது. பென்ஷன் வாங்குகிற தியாகிதான் இன்னும் வெட்கப்படாமல் 'வந்தே மாதரம்' என்கிறவன். வயதும் வறுமையும் வெட்கத்தை விலக்கிவிட்டன. பெரிய பதவி பிடித்த தியாகி உண்மை பேச எவ்வளவு கூச்சப் படுகிறான் பாருங்கள். இன்னமும் பெரும்பாலான மக்கள் 'தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறவிட்டுப் பாழ்பட்டு நிற்பதைப்' பார்த்தும்கூட, பதவியும் பட்டமும் எத்தனை சுவாதீனமாய்க் கொள்ளையடிக்கின்றன! கொள்ளையடித்துப் பழகியவர்களிடம் பாவ புண்ணிய உணர்வும் பொய்த்துப் போய் விட்டது. பாவம், மிதிபட்டுச் சாகும் பாமர மக்களிடம்தான் இன்னும் அந்த உணர்வு இருந்து கொண்டு, வீறு கொண்டு எழ விடாமல் பலவீனப்படுத்திக் கொண்டிருக்கிறது. புறக்கணிப்புக் காளாகும் இந்தச் சமுதாய இளைஞர்கள் சீற்றம் கொண்டு சிலிர்த்தெழும்போது, ஒட்டுமொத்தப் புரட்சிக்கு இச் சமுதாயம் தயாராயில்லை என்னும் பரிதாபத்தைப் பார்க்கிறார்கள். இதுவே ஒரு பரிகாசம்போல அவர்களை வன்மங்கொள்ள வைக்கிறது. அவர்களுடைய தனிமனிதக் கோபம் தறிகெட்டு வெடிக்கிறது. பயங்கரவாதிகள்—தீவிரவாதிகள் இப்படித்தானே உருவாகிறார்கள்! இவர்களில், சுகபோக அரசியல் சாணக்கியத்தின் காற்றைச் சுவாசிக்கிறவர்கள் குண்டர்களாகவும் கொள்ளைக் காரர்களாகவும் ஆகின்றனர். தங்கள் கோபத்தையே ரசிக்கக் கற்றுக்கொண்டவர்கள் இனப் படுகொலைஞர்களாக ரத்தம் பருகுகிறார்கள். இவர்களின் மறுபரிசீலனைக்குட்படாத ஒரு வழித் தீவிரத்திற்கு, சமூகப் பிரக்ஞையற்ற கல்விமுறையும், முன்னுதாரணமாய்த் திகழாத மூத்தவர்களும்தானே காரணம்?'' என்றேன்.

—அடுத்த இதழில் தற்காலிகமாய் நிறைவுறும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆலங்கட்டி மழை

/மு.ராஜசேகரன்/



'ச்சோ' வென மழை கொட்டிற்று.

ஆனால் அன்று மழை வருமென்று யாருமே உண்மையில் எதிர்பார்க்கவில்லை. எப்படி மேகங்கள் திரண்டன, எப்படி இப்படி நிலைமை மாறிற்று என்று யாருக்குமே தெரிந்திருக்கவில்லை. மத்தியானம் கூட முத்துவேல் சார் சாப்பிட வீட்டுக்குப் போய்விட்டு வரும்போது ''என்னமாக் கொளுத்துது வெய்யிலு'' என்றபடி சூரியனைப் பார்க்க அண்ணாந்த போது, நீல வானத்தையும் ஒரேயொரு வெண்பட்டு மேகத்தையுமே பார்க்க முடிந்தது. ஆனால், எப்படி இப்படி ஆனதென்று அவருக்கும் தெரியவில்லை.

அந்தப் பள்ளிக்கூடம் பணக்காரப் பள்ளிக்கூடமில்லை. ஏழைக் குழந்தைகள் படிப்பதற்காக நடுத்தரமான நாகப்பச் செட்டியார் இலவசமாகக் கட்டிக் கொடுத்தது தான். அதனால், மழை இன்னும் கொஞ்சம் சாய்வாக அடித்தால்கூட துளிகளெல்லாம் நேரடியாக வகுப்புக்குள் விழும் என்கிற அளவுக்கு நிலைமை இருந்தது. ஏனெனில் அங்கே பக்கச் சுவர்களெல்லாம் கிடையாது. எழுப்ப வேண்டுமென்றுதான் நாகப்பச் செட்டியார் விரும்பினார். ஆனால் அந்த நேரத்தில் காசில்லை. ''சரி. இப்போதைக்கு பக்கச் சுவர் வேணாம். சும்மா சப்போர்ட்டுக்குத் தூணு வப்போம். அப்பறமா பாத்துக்கலாம்'' என்று மலைக்கல் இறக்கி தூண்கள் வைத்து, கிட்டத்தட்ட பட்டணத்துக் கம்பெனிகளில் சைக்கிள் ஸ்டாண்ட்'க்கு உள்ள கூடம்போல சீமை ஓடு போட்டு அப்போதைக்குக் கட்டிக் கொடுத்தார். ஆனால்,காசு கிடைத்தாலும் மறுபடி எடுத்துக் கட்டிச் செய்வதென்றால் சும்மாவா இருக்கிறது? செட்டியாரால் அப்புறம் முடியவேயில்லை. அதன் அபத்தப் பரிமாணமே கடைசிப் பரிமாணமாகிவிட்டது.

சுற்றி—பூசப்படாத காம்பவுண்டு. நடுவில் 'ப்ளஸ்' வடிவில் சைக்கிள் ஸ்டாண்டு போலப் பள்ளிக்கூடம். 'ப்ளஸ்' போக மிச்ச இடத்தில் தோட்டம். வாத்தியார்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்ட— மேடை போட்ட கிணறு. ஹெட்மாஸ்டர் ரூம். இவ்வளவுதான் அந்தப் பள்ளிக்கூடம். 'ஸ்டாஃப் ரூ

படிப்பகம்

www.padippakam.com



பெண்மை பற்றிய என் முப்ப தாண்டு கால ஆராய்ச்சிக்குப் பின்னும் என்னால் விடை கான முடியவில்லை. எப்போ துமே விடை காணப் படாத அந்தக் கேள்வி இதுதான்: பெண் எதை வேண்டுகிறாள்?

—சிக்மண்ட் ஃப்ராய்ட்

மெ'ல்லாம் கிடையாது. தேவை யுமில்லை. அங்கே என்ன ஒளிவா மறைவா? 'ப்ளஸ்' தானே? ஒவ்வொரு வகுப்பை யும் தனித்தனியே பிரிக்க 'தட்டி'கூடக் கிடையாது. நாலு வாத்தியார்களும், மூணு டீச்சர்களும் தம்தம் இருக்கை யிலிருந்தபடியே அடுத்தவ ரோடு பேசிக் கொள்வார்கள். எவ்வளவு வேண்டுமானாலும் கத்திப் பேசலாம். ஆனால், ஒரு விஷயம். பாடம் புகட்டு வதில் மட்டும் எந்தக் குறையும் அந்தப் பள்ளிக்கூடத்தின் மீது 'நாக்கு மேல் பல்லு' போட்டு யாரும் சொல்லிவிட முடியாது. —ஸ்ட்ரிக்ட்!

முதன்முதலில் புணுப்புணு வென்று தூறினபோது, அதிச யம் நிகழ்ந்ததுபோல முத்து வேல் சார் ஓடிப்போய்ப் பார்த் தார். சூரியனை மறைத்தபடி வேகமாய்க் கிழக்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்த அந்த மேகத்திலிருந்துதான் தூறு கிறது என்று கண்டுபிடித்தார். அந்த மேகம் 'ம்ம்ம்' என்று முன்னேறிக் கொண்டிருந்தது. வைரவன் சார் கேட்டார்:

''என்ன சார், சின்னப்புள் ளயாயிட்டியளா? மழையப் பாக்குறிய?''

''ஹஹ்ஹ. அப்புடீல்லாம் ஒன்னுமுல்ல. மத்தியானங்கூட மேகமேயில்லையே. இப்ப எப் புடிரா மழை வருதேன்னு பாத் தேன்.''

முத்துவேல் சார் பதில் சொல்லிக் கொண்டே 'ப்ளஸ்' சுக்குள் நுழைந்தார். ஆனால், அவர் நுழைந்ததுதான் தாம தம். 'நெட்டு நெட்'டென்று ஓட்டில் சப்தமெழுமளவுக்கு துளிகள் கனமாயும், யரோ விட்டெறிந்த மாதிரி 'ஸ்பீ'டா யும் விழத் தொடங்கின. மறு படியும் திகைப்பு! முத்துவேல் சார் மறுபடியும் எட்டிப்பார்த் தார். மேற்கு அடிவானத்திலி ருந்து 'பூ...'மென்று ஒரு ப்ரம் மாண்டமான சாம்பல் நிற மேகப் படையே வந்து கொண் டிருந்தது தெரிந்தது. அவ்வள வுதான். சட்டெனப் பள்ளிக் கூடம் இருட்டாயிற்று. முன்பு போல முத்துவேல் சார் போர் டில் எழுதினதை இப்போது மூன்றாவது பெஞ்சியிலிருக்கும் காத்தப்பனால் 'ஸ்லாங்'காகப் பார்க்க முடியவில்லை. கண்க ளைச் சுருக்கி, கூ...ர்ந்து பார்த்து தன் மொக்கைப் பென்சிலால் எழுத வேண்டிய தாயிற்று.

அதற்குள் தரையில் நீர்

படிப்பகம்

www.padippakam.com



சில மனிதர்களுக்கு செல்வத்தால் செய்ய முடிந்ததெல்லாம் 'ஐயோ, இதை இழந்துவிடுவோமோ' என்று கவலைப்பட வைப்பதுதான்.

*— காம்டி டி ரிவரோல்*

புரளத் தொடங்கிவிட்டது. செம்புலப் பெயல் நீர்.

முத்துவேல் சாருக்கு நீர் புரளும் அந்தக் காட்சியைப் பார்த்ததும் சிரிப்பு வந்துவிட்டது. மழையென்றால் அந்தச் சிரிப்பு யாருக்குத்தான் வராமலிருக்கும்? குழந்தைகளெல்லாம் முசுமுசுத்தபடி மழையை ரசிப்பதில் மெய் மறக்கத் தொடங்கின. வெதுவெதுப்பான மண் வாசம் எழுந்து, அதற்குள் அடங்கிவிட்டது! அப்படிக் கொட்டிற்று மழை.

பெஞ்சியின் ஓரத்திலிருந்த குழந்தைகளின் முகத்தில், ஒட்டி வழியும் மழை நீரைக் கையிலேந்தும் ஆர்வம் வரத் தொடங்கிவிட்டது. திடீரென முருகேசன் எழுந்து சடக்கென வலக்கரம் நீட்டி, தன் மாநிறக் கையை நனைத்துவிட்டு, உடனே உட்கார்ந்தான். ஆனால், அவன் அவ்வளவு வேகமாய் இயங்கியும் பலனில்லை. முதுகு காட்டிக் கொண்டிருந்த முத்துவேல் சார் திடீரெனத் திரும்பிப் பார்த்துவிட்டார். முருகேசனுக்குப் பயம் வந்துவிட்டது.

'அடிப்பாரோ?'

ஆனால் அடிக்கவில்லை. சிரித்துக் கொண்டே, ''ஒதை வாங்குவ படவா'' என்று தன் சந்தனப் பொட்டு வைத்த தலையை ஆட்டிக் கொண்டே எச்சரிக்க மட்டும் செய்தார். அவர் எப்போதும் எச்சரிக்க



மட்டுமே செய்வார். அடிப்பதில்லை. அடிக்க அவரால் முடிவதில்லை. ஒரு முறை ஹெட்மாஸ்டர் அவரிடம் கேட்டதற்குக்கூட ''ஹி. எப்புடி சார் அடிக்கிறது. எல்லாம் பாவஞ் சின்ன புள்ளய. ஹிஹி என்னமோ என்னால முடியல சார் அது,'' என்றார் எல்லா வாத்தியார்களுக்கும் முன்னால். எல்லோரும் சிரித்தார்கள். கூடச் சேர்ந்து அவரும் சிரித்துக் கொண்டார்... அவர் விதம் அப்படி.

ஆனால் மறுபடி இது மாதிரி நேரக்கூடாதில்லையா? அதனால் எச்சரித்தார்.

''யாருஞ் சேட்டை பண்ணக்கூடாது என்ன? மழையில நனஞ்சா என்னாகும் தெரியுமா? காய்ச்சல் அடிக்கும். அப்பறம் பள்ளிக் கொடத்துக்கு வரமுடியாது. ஆஸ்பத்திரிக்குப் போயி ஊசி குத்திக்

படிப்பகம்

www.padippakam.com



பரம்பரைச் சொத்து என்பது நல்ல முறையில் சோம்பேறித் தனத்துக்குச் செலுத்தப்படும் மேல்பணம்தான்.

—வில்லியம் கர்ட்வின்

கிற வேண்டியதுதான். ஆமா, சொல்லிப்புட்டேன்.'' சொல்லி விட்டு மறுபடியும் மழையின் பக்கம் திரும்பினார்.

மழை கொட்டிற்று. குழந்தைகளும் ஆசிரியர்களும் வாயடைத்துப்போய் மழையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். நெஞ்சுக்குள் ஒரு இதமான குதுகுதுப்பு எல்லோருக்கும் நிகழ்ந்தது. மேற்கிலிருந்து கிழக்காகச் சாரல் வேறு வலுவாய் வந்ததும் ஓரத்திலிருந்த குழந்தைகளெல்லாம் எதிர்ப் பக்கத்துக்கு மாற்றப்பட்டனர்.

ஹெட்மாஸ்டர் அவரின் ரூமிலிருந்து 'தளுக்புளுக்'கென செம்புலப் பெயல் நீருக்குள் வேஷ்டியை மடித்துக் கட்டினபடி ஓடிவந்து குழந்தைகளை நனையவிடாமல் பார்த்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு, வந்தது போலவே 'ப்ளஸ்'ஸை விட்டு 'தளுக் புளுக்' கென ஓடிப்போனார்.

'நெட் நெட் நெட்.'

'நெட் நெட் நெட் நெட் நெட்.'

என்ன அது? எல்லோரின் முகத்திலும் கேள்வி கலந்தது. என்ன அது? என்ன அது?

ஆனால் மேரி டீச்சர் சொல்லிவிட்டார்:

'ஆலங்கட்டி மழை.'

பிறகு குழந்தைகளுக்கு செம்புலப் பெயல் நீரில் வெள்ளை வெள்ளையாய், வட்ட வட்டமாய் மிதக்கத் தொடங்கின ஐஸ் கட்டிகள் காட்டப்பட்டன. குழந்தைகளெல்லாம் 'ப்ளும்' மென மலர்ந்து, முண்டியடித்துக் கொண்டு பார்க்கத் தொடங்கி விட்டன. இம்முறை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. குழந்தைகள் கைப்பிடிச் சுவர் வரைக்கும் போய் வேடிக்கை பார்க்கத் தொடங்கின. மேரி டீச்சர் முக்காடு போட்டுக் கொண்டு ஒரு டம்ளரில் ஆலங்கட்டிகளை மழையில் நனைவதைப் பொருட்படுத்தாமல் ஓடி ஓடி பொறுக்கிக் கொண்டு 'ப்ளஸ்'சுக்குள் வந்தார்.

முத்துவேல் சாருக்கு அந்த நேரத்தை மிகவும் பிடித்திருந்தது. அவர் முகம் மலர்ச்சியோடு இருந்தது. மேலும், எல்லோருடைய முகமும் அதே போல மலர்ச்சியோடும் மனிதனின் சிறுமைகள் மறைந்து சந்தோஷத்தோடும் இருந்ததைக் கண்டார். என்னவோ, தனக்கான உலகம் உயிர்த்து விட்டது போல் இருந்தது அவருக்கு.

ஆனால், மழையென்ன அடிக்கடியா வருகிறது? அதுவும் ஆலங்கட்டி மழை! ம்? ★

படிப்பகம்

www.padippakam.com

# அடிமைகள்

**பத்மாம்பிகை**



'மனிதன் சுதந்திரமானவன்.'
எந்தப் பொய்யனின் பிரகடனம் இது?
திசைகள் எட்டிலும் அடிமைகளின் திரள்.
பிறந்த குழந்தையும் பிணமும்தான்
இங்கு சுதந்திரமானவை.
சுவாசிக்கும் எவனும் சுதந்திரன் அல்லன்.
எவனும் எதற்கேனும் அடிமைதான் என்பதே
அவன் இயக்கத்திற்கான சத்தியம்.
ஒன்றில் விடுதலையாகி,
பிறிதொன்றில் அடிமையாய்ப் பிணைவதே
அனைவருக்கும் நியதி.
ஆசைகள் சுதந்திரத்தை அபகரிக்கும்;
தேவைகள் தேசமெங்கும்
அடிமை என்று பிரகடனம் செய்யும்.
அறிவு மனிதனை அடிமையாய் ஆக்கும்.
ஆம்!
விரல்களுக்கு மோதிரம் போட்டு
கைகளுக்கு விலங்கு பூட்டுவதே அறிவுதான்.
அடிமைத்தனம் இழிவன்று; அறிவாயா!
வாழ்க்கையை விட்டு விலகிப் போனவனே
சுதந்திரமானவன் என்று தன்னைச்
சொல்லிக்கொள்வான்.
அடிமைகள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.
ஏன் தெரியுமா?
அவர்களே வாழ்க்கையை நேசிப்பவர்கள்.
தத்துவ நூல்களின் பக்கங்களில் எல்லாம்
அடிமைகளே தயாரிக்கப்பட்டனர்.
அரூபமான அடிமை விலங்குகள் இறுகி இறுகி
சோகம் சொட்டும் ஆன்மாக்கள்.
இந்தச் சோகம்கூட உன்னை
மனிதனாகச் சித்தரிக்கத்தான்!



www.padippakam.com

# வருக தோழனே!

உதயை மு.வீரையயன்

வசந்த கனவிலே வாழ்ந்தது போதும்;
வார்த்தை ஜாலங்கள் செய்தது போதும்;
கசந்து போயின வாழ்க்கை நிஜங்கள்;
கலைந்து போனது நம்மனக் கோட்டை;
அசந்து போனது நமது பயணம்;
அதனை மாற்றி அமைத்திட வேண்டும்.
வருக தோழனே எழுகதிர் போலே!



ஒப்பாரிக் கவிகள் உரைத்தது போதும்;
ஒதுங்கி நின்றே அழுதது போதும்;
சொப்பணம் கண்டு துடித்தது போதும்;
சொர்ண உலகை அமைத்திட வேண்டும்.
குப்பைகள் நாளை கோபுரமாகும்;
கொடுமைகள் நாளை அடிமைக ளாகும்.
வருக தோழனே எழுகதிர் போலே!

ஆல மரத்தின் விழுதுகள் நாமே!
அங்கே உதிரும் சருகே அவர்கள்.
வேல மரத்தின் முள்ளே அவர்கள்.
வியர்வை உலர்த்தும் நிழலே நாம்தான்.
சோலை வனத்தின் சோகக் குயிலாய்ப்
பாலை வனத்தில் பயணம் போதும்.
வருக தோழனே எழுகதிர் போலே!

கருங்கல் பாறையில் விதைகள் தூவி
கண்ணீர் பாய்ச்சிக் காத்துக் கிடந்தோம்.
ஒருவிதை யேனும் முளைத்த துண்டா?
ஒருமுறையேனும் வாழ்ந்த துண்டா?
உருகி ஓடும் பனிக்கட்டி யாநாம்?
ஒன்று திரண்டால் சாதிக்க லாம்நாம்.
வருக தோழனே எழுகதிர் போலே!

படிப்பகம்

www.padippakam.com

# வெளி

நீலம் மதுமயன்

புள்ளியும் பூமியும்
வட்டங்கள்தாம்.

வெளியில் பார்.—
அடைப்புக் குறிகளுக்குள்
அகப்பட்ட மனிதனுக்கு
சுவர்கள் மட்டுமே
வெளியை ஏற்படுத்துகின்றன.

வெளியில் பார்.—
இந்த பூமி உருண்டைக்கும்
வெளியே பூத்துக் கிடக்கும்
எண்ணற்ற உருண்டைகள்.

விசால மனங்களுக்கு
வீடுகளெல்லாம் விலங்குகள்.
விடுதலை என்பது இதோ
வெளியில் இருக்கிறது.

உள்ளுக்குள்
தன்னைப் பார்ப்பவன்
வெளியில் வேறெதையும்
பார்க்க மாட்டான்.

கோடி உருண்டைகளில்
ஒன்றிலிருக்கும் உனக்குதான்
எத்தனை எல்லைக்கோடுகள்.

இந்த வெளியைப்
பார்க்கத் தவறியதால்தான்
ஒவ்வொரு மனிதனும்,- நாடும்
தனித் தனி.
எனவே, எல்லைக்கோடுகள்
ஏப்பம் விடப்படுகின்றன.

உன்னை இணைப்பவர் யார்?
எப்போது இணைந்து
ஒன்றாவாய்?

ஏதோ ஒரு
வெளி உருண்டையில்
வெளிப்படும் பகையால்
பூமி உருண்டை ஒன்றாகும்.
அப்போது—
எல்லைக் கோடுகள் அழியும்.
விசா, பாஸ்போர்ட் வீணாகும்
அப்போதும் நீ
உலக உருண்டைகள்
ஒவ்வொன்றும் தனித்தனி
என்று தத்துவம் சொல்வாய்.

வா வெளியே;
பார் வெளியை.



# பாவம்

ந. க. துறைவன்

தரையில் விரித்த துணியில்
சில்லறைகள் சிரிக்கின்றன.

பாம்பாட்டியே,
மகுடி ஊதுவதை நிறுத்து!
பாவம், முதுகு வலிக்கும்
படமெடுத்தாடும் பாம்பிற்கு!



படிப்பகம்

www.padippakam.com

## நீயும் நானும்

**பாரதி வசந்தன்**


உனக்கும் எனக்கும்
அப்படி என்ன பெரிய
வித்தியாசம் இருக்கிறது?

நீ படித்தவன்;
நான் படிக்காதவன்.
நீ ஆபீசில்
வேலை பார்க்கிறவன்;
நான் அன்றாடம்
கூலி வாங்குகிறவன்.
நீ காய் கறி சாப்பிடுகிறவன்;
நான் கறிமீன் தின்னுகிறவன்.
நீ சாத்விகம் பேசுகிறவன்;
நான் சண்டை போடுகிறவன்.
நீ சாமி கும்பிடுகிறவன்;
நான் சாராயம் குடிக்கிறவன்.

அதனால் என்ன?

அனாதைகள் யாராவது
செத்துப்போனால்,
நான் தோள் கொடுத்துத்
தூக்கிப் போகிறவன்;
ஆனால் நீ...?





## அனாமிகன்

**1**

கோப்புகளைப்
புரட்டிப் புரட்டித்
தாள்களைத்
தேடும்போதும்
தாள்களைப் போட வேண்டி
கோப்புகளைத் தேடும்போதும்
தாள்களுக்காகவும்
கோப்புகளுக்காகவும்
அதிகாரி என்னைத்
தேடும்போதும்
உள்ளிருந்து கேட்கும்
என்னில் நான் மூழ்கி
என்னைத் தேடுவதெப்போ?
அடக்கிப் போட்டு
வேலையைப் பார்த்தால்
ஆயிரம் பேர்களாச்சு.

**2**

ஒவ்வொரு மழை தினமும்
முக்கியமான தினமெனக்கு.
வாசலில் நிறைய பேர்
ஒதுங்கியிருப்பார்கள்.
மழை கருதி
நானும் உள்ளே இருப்பேன்.
கூட்டம் பலவும் பேசும்—
அரசியல், சினிமா,— சிலர்
இலக்கியம்கூடப் பேசலாம்.
வாசலில் மனிதர்கள் நிற்பது
சுகம்தானே.

படிப்பகம்

www.padippakam.com

# ஆசை

உங்களுக்கு பலம் ஊட்ட,
எனது இதயத்தைப் பிழிந்து
மதுவாக்கி என்னால் தரமுடியுமா?
அன்பானவரே,
என் பாடலிலிருந்து சுதந்திர வாளைத்
தங்களுக்கு வடித்துத் தர
என்னால் முடியுமா?
தங்களின் அழிகிற சதையில்,
அழியாத உயிர்மூச்சை உட்செலுத்தி
ஜீவனை வெல்லவும்,
மரணத்தை மிதித்து நசுக்கவும்,
என்னால் முடியுமா?
தியாகத்தின் எத்தனையோ நட்சத்திர
உயரங்கள் காலடி படாமல்
விடப்பட்டுள்ளன.
அதேபோல்,
எனது உண்மையான காதலால்
தங்களைத் தெய்வமாக ஆக்குவது
முடியாது போகுமோ?

ஆங்கில மூலம்:
**சரோஜினி நாயுடு**
தமிழாக்கம்:
**என். ஆர். தாசன்**

# அழுக்கு

## புதுவை இளவேனில்

இன்று இவைகளை மறந்து—
பக்கத்து வீட்டுக் குழந்தையின் டாடா,
பாதையோரக் குருடனின் புலம்பல்,
தினம் தினம் என் கூடவே
பேப்பர் வாசிக்கும் அந்தப்
பள்ளிச்சிறுவனின் சிரிப்பு,
பஸ் ஸ்டாப் போகும் வரை தேம்பும்
மான்டிசோரிக் குழந்தையின் மருட்சி—
இவைகளை மறந்து
ஸ்டாப்பிற்கு வந்தபொழுது,—
இடையின் இளமை தெரிய
சேலை அணிந்திருக்கும்
அந்த ஸ்டெனோவின் அழகை
மறக்காமல்...
மனம் அழுக்குப் பிடித்திருந்தது.



www.padippakam.com

● வல்லிக்கண்ணன், என் ஆர்.தாசன், புவியரசு போன்ற பழம் பெரும் எழுத்தாளர்களின் ஆதரவைக் 'கவிதாசரண்' பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது. 'தமிழுண்ணிகள்' கடைசி வரிகள் குறிப்பிடத் தக்கன. நெல்லை சு.முத்துவின் கட்டுரை ஓர் ஆழமான படைப்பு. இதர அம்சங்களும் இதழின் வளர்ச்சிப் பாதைக்குச் சான்றுகள். ஆண்டு மலரை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

நெல்லை–6 — தி.க.சிவசங்கரன்

● இதழ் சிறப்பாக உள்ளது. என்.ஆர்.தாசன் நாடகம் 'யுத்த தர்மம்' அரசியல் தர்மங்களை நன்கு புலப்படுத்துகிறது. 'கதவைத் திற, அம்மா' நன்றாக எழுதப் பட்டிருக்கிறது. நெல்லை சு.முத்துவின் 'கவிதை இயல்' சிந்தனைகள் அருமை. விசாலமும் ஆழமும் கொண்ட பார்வையோடு ஆய்வு செய்திருக்கிறார் நண்பர். 'நாற்று' பாராட்டுதலுக்குரிய சிந்தனை வளர்க்கும் பகுதி.

சென்னை–5 — வல்லிக்கண்ணன்

● 'தமிழுண்ணிகள்' கல்வித் துறையின் போக்கையும் மொழிப் பற்றில்லாத வேடதாரிகளின் கபடங்களையும் அம்பலப் படுத்துகின்றன. 'யுத்த தர்மம்' யதார்த்தமான படைப்பு. 'வலிய சக்தி' வல்லிக்கண்ணன் அவர்களின் வலிமை மிக்க சொற்கோலம் பனிதனுக்கு சுய நம்பிக்கையூட்டும் பொருள் செறிந்தது. கவிதைகள் அனைத்தும் பிரமாதம்.

வேலூர்–1 — ந.க.துறைவன்

● 'நாற்று' நல்ல விதத்தில் பயிராகும்படியான சிந்தனைகள். 'சோற்றுக் கவலையும் 'சொந்தக் கவலையும் உன் சிந்தனையைத் தின்றுவிட்டால், நீ ஒரு பேசத் தெரிந்த விலங்கு' என்பது மிகமிக அழகு. 'ஊமை நாடகம்' ஆழ் மனக் காட்சிகளை மிகத் துல்லியமாகக் காட்டும் நிழற்படக் கவிதை. அவ்வாறே 'தர்க்க ஞானம்' கவிதையும். 'தமிழுண்ணிகள்' இக்காலக் கல்வி முறை பற்றியும், தமிழ் மக்களின் ஃபாலி மனப்பான்மையையும் அருமையாகச் சுட்டிக் காட்டுகிறது. 'மனிதப் போலிகள்'— கவிதை, வரிகளில் அல்ல; கருத்துகளில் என்பதை அழகாகப் படம் பிடித்துள்ளார் கவிஞர் துறவி அவர்கள். போற்றுதற்குரிய இக் கவிஞரை இப் பொல்லாத உலகம் புரிந்து கொள்ளாதிருப்பதுதான் விந்தை. 'கதவைத் திற, அம்மா' ஒரே மூச்சில் படித்து முடிக்கும்படியான நல்ல கதை. மொத்தத்தில் தமிழ் வளர்க்கும் தொண்டு வாழ்க!

சென்னை–17 — முத்து எத்திராசன்

● பெற்ற தாயைச் சோரம் போனவளாக்கிக் கொலையும் செய்து பார்க்க ஒரு மகனுக்கு எவ்வளவு கல் நெஞ்சம் இருக்க வேண்டும்! எய்தவன் முத்துநிலவு இருக்க மாதவனை நொந்து என்ன செய்ய. புதுமைப் பித்தனும் ஜெயகாந்தனும் ஜீ.நாகராஜனும் விபச்சாரம் என்னும் சமூக அவலத்தை எவ்வளவு தர்க்க

படிப்பகம்

www.padippakam.com

நேசம் பேசும் வாசகர்கள்

# கொஞ்சம் ஆழமாய்

நியாயத்துடன் அணுகியுள்ளார்கள் எனப் பார்க்க வேண்டும். கவிஞர் சச்சிதானந்தன் துணிச்சல் தமிழ்க் கவிஞர்களிடம் காணப் படாத ஒன்று. கவிஞர் புவியரசு முனைந்திருந்தால் முடியாத ஒன்றல்ல. தடுப்பது என்ன? வரலாற்றில் யுத்தங்கள் சுய நலத்தின் பொருட்டே என்பதைக் கூறி இன்றைய அரசியல்வாதி களின் முகத் திரைகளைக் கிழித்திருக்கிறார் என்.ஆர்.தாசன்.

கவிதாசரணின் தயாரிப்பு தனித் தன்மை வாய்ந்தது.

வாய்பாடி முத்துப்பொருநன்

★ *'புரிதல் அர்த்தப்படும்போது, விமர்சகன் நிற்கும் தளமும் நோக்கும் கோணமும் நிச்சயமாகின்றன' என்பதொரு மொழி. அது இப்போது நினைவுக்கு வருகிறது. 'கதவைத் திற அம்மா'வுக்கும் விபச் சாரத்திற்கும் என்ன சம்பந்தம்? அதன் தர்க்க நியாயத்திற்கும் மாதவனுக்கும் என்ன அவசியம்? ஜெயகாந்தன் போன்றவர்கள் அவலங்களை அனுதாபத்தோடு அணுகச் சொன்னார்களே தவிர, கொச்சைத்தனங்களை ஒருபோதும் நியாயப் படுத்தவில்லை எனும் புரிபடலே அவர் போன்றவர்களுக்கு நாம் வழங்கும் கௌரவம்.*

● நெல்லை சு.முத்துவின் 'பரிணமித்து வரும் கவிதையியல்' நன்றாயிருந்தது. ந.பிச்சமூர்த்தி வசன கவிதை என்று சொல்லிக் கொண்டாலும் புதுக்கவிதைகள் எழுதியவரே என்பது பதிவுசெய் யப்பட வேண்டுமென்பது என் அபிப்பிராயம். தன்னுடைய கவிதைகள் பற்றியே சரியான பிரக்ஞை யில்லாதவரிடம் இருந்து திரு முத்து வசன கவிதைக்கான விளக்கத்தைத் தானம் வாங்கி யிருக்க வேண்டாம். இவரது பார்வையே இன்னமும் கூராக இருக்கிறது. கட்டுரை உண்மையிலேயே பாராட்டப்பட வேண் டிய ஒன்று. திரு என்.ஆர்.தாசனின் 'யுத்த தர்மம்' படித்தேன். இது எந்த விதத்தில் நாடகத்தில் சேர்த்தி என்றே தெரியவில்லை. எழுத்தில் நாடகம் தரப்பட்டாலும் அது நிகழ்த்தப்படும்போதே முழுமையாகிறது. நாடகம் கேட்பவர்களுக்கானது பட்டுமல்ல, பார்ப்பவர்களுக்கானதும்தான். இந்த நாடகத்தை(!?) நிகழ்த்தும் போது கண்ணை மூடிக்கொண்டு கேட்டாலே எல்லாம் புரிந்து விடுமே. நவீனத் தன்மையில்லாத நாடகத்தை நீங்கள் வெளி யிட்டிருக்கவே வேண்டாம் அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைத்துக் கொண்டிருப்பதால் நாடகங்களுக்கு ஏதாவது செய்ய முடியுமென்று நினைக்கிறீர்களா? அப்புறம், உங்கள் பத்திரிகை யில் கதைகள் பரவாயில்லை. இந்த இதழில் ஒரு கவிதைகூட என்னளவில் எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இன்

படிப்பகம்

www.padippakam.com

னும் கொஞ்சம் ஆழமான கவிதைகளைத் தேர்ந்தெடுத்து வெளியிடும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளலாமா?

சென்னை-53 ஜீவ்ராம் சுந்தர்

★ நான் சிறுவனாயிருந்தபோது நடந்த சம்பவம் இது: திருவிழாவில் ஜவ்வு மிட்டாய்க்காரன் ஒரு சிறுவனுக்குக் கைக்கடிகாரம் போலவும் எனக்குத் தேள் போலவும் மிட்டாயைச் செய்து கொடுத்தான். எனக்கு கடிகாரம்தான் வேண்டும் என்று அடம்பிடித்து தேள் வடிவத்தைத் தரையில் விட்டெறிந்தேன். அது ஒரு தின்னும் பண்டம்—தித்திப்புப் பொருள் என்பதையே மறந்துபோய், தேளையே அனுமானித்துக்கொண்டுவிட்டேனே. அது இப்போதென் நினைவல்.

'யுத்த தர்மம்' கைக்குக் கிடைத்தவுடன் 'ஒரு சரியான மதிப்பீட்டின் நயமான வெளிப்பாடு இது. எளிமைப்படுத்தலே ஒரு கம்பீரம்தான் என்பது போன்றதொரு மனோதர்ம சிந்தனை' என்று மிகவும் பாராட்டி வெளியிட்டோம். எந்தவிதமான எழுத்தாக்கத்திலும் முதன்மைப்பட வேண்டுவது அதன் சிந்தனையும் பயனுமே. வடிவம் அழகாயிருந்தால் நல்லது. அகத்தியன்கூட வடிவில் தோற்றவனே; ஆனால் அறிவில் அல்ல கவிதைகள் ஒன்றுகூட அவரளவில் பாதிக்கவில்லை என்கிறார். அவ்வாறே இருக்கட்டும். எங்களின் தேடல் தொடர்ந்திருக்க இவரின் பசி துணைபுரியட்டும். 'அனாமிகன்' என்னும் பெயரில் வரும் இவர் கவிதைகளிலாயினும் ஆழம் மிக வாழ்த்துவோம்.

● மனிதன் ஒரு நாளின் ஏதாவதொரு கணத்தில் மிகத் தெளிவாக இருக்கிறான். அப்படிப்பட்ட கணத்தில் புறப்பட்ட கவிதாசரணில் மலர்ந்து வரும் எழுத்துக்களின் இலக்குகள் தீர்மானிக்கப்பட்டனவாகவே அமைகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் காரணம் என ஒன்று இருக்கவே செய்கிறது. அதேபோல் இந்த எழுத்துக்கும் நதிமூலம், ரிஷிமூலம் என்பது மாதிரியான மூலம் ஒன்று இருக்க வேண்டும். அது வாழ்வின் யதார்த்தங்களை, கனவுகளை, செயல்பாடுகளை ஒருவிதத்தில் விழிப்புணர்வுடன் வெளிப்பாடு செய்கிறது. அவ்விதம் வெளிப்பட்டவைகள் கவிதாசரணில் மலராக... வாசக உள்ளங்களில் மணமாக!... காலையில் ஆதவன் உதயம்போல் கவிதாசரணின் தனித்துவம் நேர்த்தியாகவே தொடரப்படுகிறது. கவிதாசரண் வாயிலாக தனித்துவ வளர்ச்சி கவிதையின்பால் ஏற்பட இனி முயற்சி கொள்ளலாம்; வளமாய் எழுதுவோர் குறைவுதான் எனினும்.

வாய்பாடி வா.மு.கோமு

★ இதழில் கவிதையை நவீனப்படுத்த வேண்டும் என்பது பலரது அபிப்பிராயம். வேறு வகையில் எமக்கும்கூட அப்படியே. ஆயின், தளம் மீறிய—தாண்டிய நவீனம் நம்மைத் தடுமாற வைத்துவிடக் கூடாதே என்னும் ஜாக்கிரதை உணர்

படிப்பகம்

www.padippakam.com

வும் தொட்டுக்கொண்டு வருகிறது. மேலும்,இந்த அபிப்பிராயம் கூறுவோர், ஏதோ ஒரு தாக்கத்திற்கு ஆட்பட்டவர்களாய், ஒரு இஸந்திற்குத் தங்களைப் பத்திரப் படுத்திக்கொண்டவர் களாய், மொழிக் கூறு பற்றி அலட்சியப் படுத்துகிறவர்களாய், யாருடைய கண்ணாலோ தம்முடைய பிம்பங்களைக் காட்சிப் படுத்துகிறவர்களாய் இருந்துவிடக் கூடாதே என்னுமோர் அச்சமும் தோன்றுகிறது. இதற்கான காரணமாய்ப் பளிச்சென உறைப்பது— கவிதையில் மரபுகளைப் பற்றி இவர்களுக்கோர் அபிப்பிராயமோ, தாக்கமோ மெய்ப்படவில்லை என்பதாகிறது. பண்பாட்டுத் தளத்தில் நம் பிதுரார்ஜித சொத்துக்கு மேல் என்ன வருகிறதோ, அதுதான் வரவாயிருக்க முடியும். இந்தப் பிரக்ஞையை ஒதுக்குவதானால், மொழியை முதன்மைப் படுத்தாத, எதனோடும் சரி பார்த்துக் கொள்ளப் படாத நவீனப் பண்பை ஜீரணித்துக் கொள்ளும் ‘சூனியப் பிரபஞ்சிகளாக’, நம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டும். இதில் எது சாத்தியம்? எழுத்தில் இன்றைய பலரும் எதிர்மறையைத்தான் நேசிக்கவோ, விமர்சிக்கவோ முன் வருகிறார்கள். ஒத்திசைப்பில் அவசமுற்றவர்களாகவோ, ஆக்ரோஷமுற்றவர்களாகவோ இருக்கிறார்கள். இது ஒரு மானுடச் சீர்மையின் பிறழ்வாகாதா? இதுவே சமூகத்தின் நிரந்தரக் கட்டமைப்பாக இறுகிவிடுமோ என்பது பற்றி எனக்குள் ஒரு தர்க்கம்.

செயல்பாட்டுக்கு அர்த்தம் தேடும்போது, இந்த விசாரங்களெல்லம் வந்து தொலைக்கின்றன. மனித ஞாபகங்களோடு செயல்பட நினைக்கும் ஓர் இதழாளனுக்கு இவை அவசியந்தான் என்று படுகிறது. ‘நான் என் அப்பனின் பிள்ளை’ என்னும் விலங்கைப் பூட்டிக்கொண்ட பின் இது தவிர்க்க முடியாதது என்னும் அந்தஸ்தை அணிந்து கொள்கிறது.



# கலையின் தோல்வி

/கே. ஜெகதீஷ்/

கலைஞன் உருவாகிறான் என்று சொல்கிறார்கள். ஆனால் அப்படி உருவாகிற கலைஞன் சமூகத்தால் எப்படியெல்லாம் அலைக்கழிக்கப்படுகிறான் என்று பார்ப்போமேயானால் கலை

படிப்பகம்

www.padippakam.com

ஞன் உருவாக்கப்படுவதில்லை. சிதைக்கப்படுகிறான் என்பதே நிஜமாகும்.

காலம் அளித்துள்ள கலைப் பாதையின் சுவடுகளில் கண்ணீர் நிரம்பிய பள்ளங்களே அதிகம். தன் சோகங்களின் மீது ஏறி நின்று கதறுகிறபோதுதான், கலைஞன் உச்சிக்குப் போன தற்கான கைத்தட்டல்கள் கிடைக்கின்றன.

''புத்தகங்கள் வெற்றி பெறுகின்றன; ஆனால் எழுதியவ னின் வாழ்க்கை தோற்று விடுகிறது'' என்றார் ஆங்கிலக் கவி ஞர் ராபர்ட் பிரௌனிங். படைப்புக் கலைக்கு நேர்ந்த இந்த அவலம் சாதாரண இழப்பா...?

வணிகப் பத்திரிகைகளில் பணம் வரும் எனினும் படைப் பாளியின் சுயமான குரலைக் கேட்க முடிவதில்லை. மிகவும் அபூர் வமாகத்தான் சில இலக்கியப் படைப்புகள் உருவாகின்றன. கலாச்சாரத்தின் கலைந்து போகும் மேகங்களாகவே ஜனரஞ்ச கப் படைப்புகள், எழுதியவனின் வாழ்நாளிலேயே மறைந்து போகின்றன. இங்கு படைப்பாளி வெற்றி பெற்றான்; ஆனால் அவன் படைப்பு தோற்றுப் போனது!

தனிப் புத்தகங்களாகத் தங்கள் படைப்புகளை வெளியிடும் படைப்பாளிகள் அதை விற்கவே பத்து ஆண்டுகள் ஆகக்கூடும். பணம் கொடுத்து புத்தகம் வாங்கிப் படிக்கிற நல்ல பழக்கமெல் லாம் நம் வாசகர்களுக்குக் கிடையாது. தெரிந்தவர்கள் இலவச மாகத்தந்தால் மட்டுமே படிப்பது என்ற மிக உயர்ந்த குணம் அவர்களுக்கு.

சிறுபத்திரிகைகள் ஓரளவு சரியான படைப்புகளை அடை யாளம் காட்டிவிடுகின்றன, எனினும் வெளியாகிற எல்லா சிறு பத்திரிகைகளும் அறிவு பூர்வமானவைதானா?

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் எப்போதுமே நல்ல படைப்புகள் அரங்கேறுவது சாத்தியமில்லை. ஒன்றிரண்டு விதிவிலக்குகள் உள்ள போதிலும் அரசு இயந்திரத்திற்கு ஆதர வான குரல் இலக்கிய ரீதியாக உலகில் எங்குமே வெற்றி பெற் றது கிடையாது.

ஜாதியின் தயவாலும், பதவி தரும் பிரமையாலும், பெண் என்ற சலுகையாலும், சிபாரிசின் பேராலும் இங்கு பிரபலம் அடைந்தவர்கள் நிறைய பேரைச் சுட்டிக் காட்டிவிடலாம். ஆனால் அவர்களின் படைப்புகளை வெகு சுலபமாக தூக்கி யெறிந்துவிடமுடியும். ஏனெனில் தங்கள் படைப்பனுபவத்தை உருவாக்கும் தேடலையோ தாகத்தையோ அவர்கள் எப்போ துமே கொண்டு விடப் போவதில்லை, சுலபமான வெற்றிக ளால் சிதைந்தவர்கள் இவர்கள்.

நல்ல எழுத்து, நல்ல இலக்கியம் என்று எங்கேயோ நாலு பேர் ஆதங்கப்படுவது பற்றித் துளியும் அக்கறையின்றி, ஆர்வ

படிப்பகம்

www.padippakam.com

மின்றி, உலகம் லௌகிக தேவைகளின் நெரிசலில் கலையையும், கலைஞர்களையும நசுக்கிக் கொண்டிருக்கிறது. ''இருட்டைக் கண்டு பயப்படும் குழந்தையை மன்னிக்கலாம். ஆனால் வெளிச் சத்தைக் கண்டு பயப்படுகிற மனிதர்களை என்ன செய்வது?'' என்கிற பிளேட்டோவின் கேள்விதான் ஞாபகத்திற்கு வருகிறது. வாழ்வுக்கும் சிந்தனைக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்ற மாயப் பிரதிமையில் ஒரு பொய்த்திடத்தால் சுற்றிச் சுழலும் உலகின் மனிதர்களால் சிதைந்த கலை உள்ளங்கள் எத்தனை?

மக்களின் சிந்தனைகளைப் பிடித்துள்ள கட்சி வெறி, ஜாதி வெறி போன்ற நோய்களை, இந்த நோயால் நொடித்துப் போன கலையை, எப்படி மீட்கப் போகிறோம்? மதம் சார்ந்த, கலை இலக்கிய அறிவு சார்ந்த கண்ணோட்டங்களில் புதிய வெளிச்சம் பாய்ச்சக் கூடிய சக்தி எது? மிகவும் சிக்கலான கேள் விகள்; ஆனால் அவசியமானவையே.

ஜாதிகளுக்கு சங்கம் இருக்கிற போது, அரசியலுக்கு ஆயி ரத்தி எட்டே முக்கால் அரைக்கால் கட்சிகள் இருக்கிற போது, துணுக்கு எழுதுபவனுக்காகக் கூட அமைப்பு இருக்கிற போது, இலக்கியத்திற்கென்று எந்த ஒரு இயக்கமும் தோன்றாமலிருப் பதும் வலுப்பெறாமலிருப்பதும் ஏன்? இலக்கியமே ஒரு இயக் கம் எனினும் இலக்கியம் மட்டுமின்றி இன்னும் உள்ள பல கலைகளின் எதிர்கால வெற்றிகளுக்காக, அதற்கென்று அர்ப் பணித்துக் கொண்டவர்களின் வெற்றிக்காகவும் நாம் என்ன செய்ய முடியும்?

கேரளாவிலோ வங்காளத்திலோ ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி கள் தமிழகத்தில் தொடராதோ? ''இந்த வெளிச்சத்தை என்ன செய்வது? ஒரு தீர்த்தக்கரை இருந்தால் சொல்லுங்கள் தலை மூழ்கித் தொலைத்துவிடலாம்'' என்று எழுதிய கவிஞர் புவி யரசு போல இன்னும் எத்தனை கலையுள்ளங்கள் கிடைத்தற் கரிய அறிவு வெளிச்சத்தைத் தலைமுழ்கித் தொலைத்துவிட தீர்த்தக்கரைகளைத் தேட வேண்டும்?

கலீல் ஜிப்ரானின் இந்தக் கவிதையுடன் இதை உங்கள் சிந் தனைக்கும் செயலுக்கும் விடுகிறேன். மக்களைப் பார்த்து கிப் ரான் சொல்கிற இந்த வார்த்தைகள் கனமானவை.

''எங்கள் பெருமையை நீங்கள் வெறுக்கிறீர்கள்
உங்கள் சிறுமையைக் கூட நாங்கள்
அனுதாபத்துடன் பார்க்கிறோம்.
உங்கள் வெறுப்புக்கும் எங்கள் அனுதாபத்திற்கும்
இடையில்
காலம் ஸ்தம்பித்துப் போய் நின்று கொண்டிருக்கிறது.''

படிப்பகம்

www.padippakam.com

வாராய் நிலவே வையத் திருவே,
வெள்ளைத் தீவில் விளையுங் கடலே,
வானப் பெண்ணின் மதமே, ஒளியே,
வாராய் நிலவே, வா.

மண்ணுக் குள்ளே அமுதைக் கூட்டிக்
கண்ணுக் குள்ளே களியைக் காட்டி
எண்ணுக் குள்ளே இன்பத் தெளிவாய்
வாராய் நிலவே, வா.

இன்பம் வேண்டில் வானைக் காண்பீர்,
வானொளி தன்னை மண்ணிற் காண்பீர்,
துன்பந் தானோர் பேதைமை யன்றே!
வாராய் நிலவே, வா.

அச்சப் பேயைக் கொல்லும் படையாம்
வித்தைத் தேனில் விளையுங் களியாய்
வாராய் நிலவே, வா.

—*மகாகவி பாரதியார்*

*விளம்பர உதவி:*

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

- பொருள் போக்குவரத்து சம்பந்தமான அனைத்து பிரச்சனைகளுக்கும் சுலபமான தீர்வு
  **ஏ பி டி பார்சல் சர்வீஸ்**
- இருபத்தைந்து ஆண்டுகளாக வணிகப் பெருமக்களின் நம்பிக்கைக்குரிய தேர்வு
  **ஏ பி டி பார்சல் சர்வீஸ்**
- உங்களுக்கு ஏற்றதொரு பார்சல் சர்வீஸ்
  **ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

எங்களது சேவையை உங்களுக்கும் தொடர
எங்களுக்கு ஓர் வாய்ப்புத் தாரீர்!
குறைந்த கட்டணம்... விரைந்த சேவை.

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

10/13-15, காளிங்கராயன் தெரு,
ராம்நகர். கோவை-641009.



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க்கையும் நடைமுறைகளும்

/வல்லிக்கண்ணன்/

**வா**ழ்க்கை, நடைமுறையில், சந்தோஷங்களை விட சோகங்களையே (துன்பங்களை, துயரங்களை) மனிதருக்கு அதிகம் தந்துகொண்டிருக்கிறது.

மனிதர்கள், இயல்பாக, சந்தோஷங்களை வளர்ப்பதைப் பார்க்கிலும், துன்ப துயரங்களையும் வேதனைகளையும் அதிகப்படுத்திக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

தங்களுக்குத் தாங்களே இவ்விதம் செயல் புரிவதின் மூலம், தங்களுக்கு மட்டுமல்லாது, தங்களைச் சேர்ந்தவர்களுக்கும்—தங்களைச் சுற்றி உள்ளவர்களுக்கும்— வேதனையும் துக்கமும் உணர்ச்சிக் குமைதல்களும் ஏற்படுத்தி வருகிறார்கள். இதன் மூலம் தங்களுடைய அமைதியையும் ஆனந்தத்தையும் கெடுத்துக் கொள்வதோடு, மற்றவர்களின் மன அமைதியையும், ஆனந்த வாழ்வையும் சீர்குலைக்கிறார்கள்.

இந்த நிலையை, என் நண்பர் ஒருவரின் கடித வரிகள் உள்ளபடி சொல்கின்றன:—

வாழ்வின் தகிப்பு பொசுக்குகிறது.
உதறிட முடியா உறவுகள்;
உணர்ந்திடத் தெரியாத உலகம்;
சுற்றிப் பழிபேசும் பேச்சுகள்;
தப்பிக்க இயலாத திசைகள்;
போகப்போக மருட்டும் பாதை;
வாழ முடியாத கனவுலகம்;
வாழ விடாத நனவுலகம்;
நம்பிக்கை—அதன் இன்மை;
எதுதான் மெய்மை?



மனிதர்களின் வாழ்க்கையில் எதுவுமே சரியில்லை என்று தோன்றுகிறது. பலப்பலருடைய வாழ்க்கை முறைகள் இப்படி எண்ணத் தூண்டுகின்றன.

மனிதர்கள் சேர்ந்து வாழும் பிராணிகள்; சேர்ந்து வாழ்வதனால் வாழ்க்கையில் வசதிகளும் சுக செளகரியங்களும் சந்தோ

படிப்பகம்

www.padippakam.com

ஷங்களும் பெருகும் என்று நம்பப்படுகிறது.

ஆனால், சேர்ந்து வாழ்கிற அமைப்பில் (குடும்பங்கள், சமூகங்களில்) சிக்கல்கள் பிரச்னைகள், குழப்பங்கள், போட்டிகள், பொறாமைகள், பொருமல்கள், குமுறல்கள், குமைதல்கள், கொதிப்புகள், சாடல்கள், மோதல்கள் தினம் தினம் தலைகாட்டுகின்றன.

இயல்பாகக் கிட்டக்கூடிய சந்தோஷங்கள், மனிதரின் சிறுமைக் குணங்களாலும் குறுகிய நோக்கினாலும், குள்ளமனப் போக்கினாலும், மிதித்துத் துவைத்துச் சீரழிக்கப்படுகின்றன.

'நாடகமே உலகம்' என்று எளிதாகச் சொல்லிவிடலாம். ஒதுங்கியிருந்து பார்ப்பவர்களுக்குத்தான், பிறருடைய வாழ்க்கை நாடகமாகத் தோன்றக் கூடும். ஆனால், அனுபவிக்கிறவர்களுக்கு அவரவர் வாழ்க்கையின் சுமை— வேதனை— தகிப்பு உறுத்திக் கொண்டிருக்கும். தங்களுடைய வாழ்க்கையை ஒரு நாடகமாக அவர்கள் கருத மாட்டார்கள். கருதவும் முடியாது.

இதிலும் விசித்திர தன்மைகள் உண்டு. தனக்கு ஏற்படும் சின்ன வேதனைகளைக்கூட பெரிது படுத்துவார்கள் சிலர். சுற்றுப்புறத்தில்— உலகத்தில்—நிகழ்ந்து கொண்டிருக்கும் மாபெரும் துன்பதுயரங்கள் அவர்களைத் தொடுவதே இல்லை. அவர்கள் மனசை— உணர்வுகளை உலுக்குவதில்லை.

இதை நன்கு புலப்படுத்துகிறது ஒரு கதை. சோவியத் ரஷ்ய எழுத்தாளர் ஒருவர் எழுதியது. அவர் பெயரும் ஞாபகமில்லை; கதையின் பெயரும் நினைவில்லை. 'சிறந்த சோவியத் சிறுகதைகள்' என்றொரு தொகுப்பில் எப்பவோ படித்தது. கதையின் விஷயம்தான் முக்கியம்—

ஏசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்காக நடத்திச் செல்லப்படுகிறார். கடினமான பாதையில். பாரமான சிலுவை மரத்தைத் தானே சுமந்து கொண்டு.

அந்தச் சுமை அவரை அழுத்துகிறது. தளர் நடையில் தள்ளாடுகிறார். தடுமாறித் தடுமாறி நடக்கிறார்.

வழி நெடுக ஜனங்கள் கூட்டம். வீடுகளின் மொட்டை மாடிகளிலும் பெண்கள் நின்று பார்க்கிறார்கள்.

ஒரு பெரிய வீடு. விசாலமான மாடி அறை. சுகபோக வசதிகள். கட்டிலில், சொகுசு மெத்தை மீது செல்வச் சீமான் ஒருவன் அமைதியின்றிக் கிடக்கிறான். புரளுகிறான். தவிக்கிறான். அவனுக்குத் தலைநோவு.

நெற்றியில் தைலம் தடவிப் பிடித்துவிட மனைவி பக்கத்தில்

www.padippakam.com

இல்லை. அதுவேறு கொதிப்பு அவனுக்கு.

அவள் மாடியில் நின்று, கீழே பாதையோடு தள்ளாடி நடக்கிற ஏசுவைப் பார்த்து நிற்கிறாள். மன வேதனையோடு கண்ணீர் வடிக்கிறாள்.

ஏசு தடுமாறி விழுகிறார். பாரமான சிலுவை அவரை அழுத்துகிறது. 'எழு, எழுந்து நட' என்று கசையால் அடிக்கிறான் காவலாளி.

மக்கள் அனைவரும் துயரக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

அறைக்குள் தலைவலியால் அவதிப்படும் சீமான் எழுந்து அப்படியும் இப்படியும் நடக்கிறான். சன்னல் வழியாகப் பார்க்கிறான், தெருவில் நடப்பதை. தன் மனைவி வேடிக்கை பார்த்து நிற்பதையும் கவனிக்கிறான். ஆத்திரம் பொங்குகிறது அவனுக்கு.

'ஏ தடிப்பிணமே! நான் நோவால் செத்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னை கவனிக்காமல், தெருவில் நடக்கிற நாடகத்தை வேடிக்கை பார்த்து நிற்கிறாயே. உடனே வா. மருந்து எடுத்து என் நெற்றியில் தடவு' என்று உறுமுகிறான்.

'அம்மா, என்ன வலி வலிக்குது' என முனகியபடி, சொகுசான மெத்தை மீது சரிகிறான்.

ஏசு மெதுவாக எழுந்து, கனத்த சிலுவையைச் சுமந்தபடி தள்ளாடி நடக்கிறார்.

அவ்வளவுதான்.

கற்பனைகளிலும் தமது கனவுகளிலும் ஆழ்ந்திருக்கிற மனிதர்கள் பிரத்தியட்ச உண்மைகளைக் காண்பதில்லை. கண்டாலும், அவற்றைப் பெரிதாக மதிப்பதில்லை.

வாழ்க்கையின் பல்வேறு தன்மைகளையும், பலவித மனிதரின் வித்வித இயல்புகளையும் அனுபவங்களையும் நன்கு பதிவு செய்து இலக்கியமாக்கியவன் நாவலாசிரியன் பால்சாக். அவன் அனைத்தையும் மனித நாடகங்களாகவே (ஹ்யூமன் காமெடி) கண்டான் என்பதை ஒரு நிகழ்ச்சி தெரிவிக்கிறது.

பால்சாக்கிடம், அவனுடைய உதவியாளன், அன்று நிகழ்ந்த சோக சம்பவம் ஒன்றை உருக்கமாக விவரித்தான் சில நபர்களின் துயரங்கள் பற்றிச் சொன்னான். அதைப் பொறுமையின்றிக் கேட்டு முடித்த பால்சாக், 'போகட்டும்! இனிமேல் நாம் நம்முடைய நிஜ உலகத்தில் பிரவேசித்து, உண்மை மனிதர்களின் வாழ்க்கையை கவனிப்போம்' என்று சொல்லி, அவன் எழுதிக் கொண்டிருந்த நாவலின் பக்கங்களைப் புரட்டினான். இது வரலாறு.


ஆகவே, அவரவருக்கு அவரவர் வாழ்க்கையே பெரிசு—முக்கியம்—நிஜம்! ●

படிப்பகம்

www.padippakam.com

# பிச்சமூர்த்தியின் மரபுக் கவிதைகள்

/நெல்லை சு. முத்து/



''மனதிற்கு வினோதமான ஒரு இயல்பு உண்டு. எந்த நிலையில் அது இயங்கி வருகிறதோ அதற்கு நேர் எதிரிடையான முறையில் இயங்க வேண்டுமென்ற நுண் அவா மனதில் எழுவதுண்டு... இந்த மாதிரி எதிரிடையான தூண்டுதல் என்னுள் ஏற்பட்டதும், அப்பொழுதே மரபான முறையிலும் கவிதையை அமைத்துப் பார்க்கலாமே என்று தோன்றிற்று. அதன் விளைவாக, யாப்புக்கிணங்க கவிதைகளும் புனைந்தேன்,'' என்கிறார் ந. பிச்சமூர்த்தி (முன்னுரை 'குயிலின் சுருதி'—3-3-1970)

இதே மாதிரியான ஒரு வினோத மன இயல்பில் புதுக்கவிதை சோதனை நாட்டிய ந.பி.யின் யாப்பிலக்கணத் தளைக்குட்பட்ட கவிதைகளைக் கொஞ்சம் அசைபோடும் எண்ணமே இந்தக் கட்டுரை நோக்கம்.

1946, 1947 வாக்கில் இப்புதுக்கவிதை மூலவரின் 'குயிலின் சுருதி' என்ற குறுங்காவியமும், 'போரியல்' என்ற மகாபாரத ஓரங்கமும் 'சிவாஜி' மலர்களில் வெளிவந்தவை.

ஒரு சில ஆண்டுகள் கழித்து 'குமாஸ்தா பாட்டு' என்றொரு காவியம் 'தேனீ' இதழிலும் அச்சேறிற்று. ஆயினும் இவற்றுக்கெல்லாம் முன்னமேயே எழுதப் பெற்றதான 'காதலின் இரவு' எனும் கவி ஓவியம் மட்டும் சுமார் இருப்தாண்டுகளுக்குப் பிறகு 1968-ல் 'எழுத்து'ப் பத்திரிகையில் வெளியானது.

முடிவாக- தொகுப்பு நூலில் அன்றி சஞ்சிகை உலகில் சஞ்சரிக்காமலேயே முடங்கிக் கிடந்தது ''அனங்கன் பிறப்பு'' எனும் படைப்பு.

இந்த மரபு இலக்கியத்தினுள் சந்தமும் விருத்தமும் மந்திரம் போல இழைந்தோடும். பிச்சமூர்த்தியின் மரபுக்கவிதைகளும் இவ்வகைக்குரியன.

## காதலின் இரவு:

தமது 38-ஆம் வயதில் ஸ்ரீராமானுஜர் என்ற திரைப்படத்தில் ஆளவந்தார் பாத்திரமேற்று நடித்துள்ள இக்கவிஞர் தாம் கண்ட சிந்தாமணி என்ற திரைப்படத்தின் தூண்டுதலால் எழுதிய காவியம்—'காதலின் இரவு'—ஒரு தாசியின் ஏக்கத்தினைச் சித்தரிக்

படிப்பகம்

www.padippakam.com

கும் ஓவியம்.

''கழிவுறும் நேரம் காணாள்;
கனவையோ துயிலோ
காணாள்;
ஒழிவறும் காற்றைக் காணாள்
ஓங்கிடும் வெள்ளம் காணாள்;
வழியுறும் வாதை காணாள்;
வானிடை மின்னைக் காணாள்
அழிவுறும் காதல் கொண்டாள்
ஆழ்ந்திடும் அயர்வைக்
கண்டாள்.''

அறுசீர் மற்றும் எண்சீர் விருத்தங்கள், சட்டளைக் கலித்துறைப் பாடல்களில் தம் யாப்பின் புலமை மெருகு கெடாமல் கையாண்டுள்ள ந.பி. தமது கருத்தோட்டத்திலும் ஆங்காங்கே மரபான உவமை உருவக அணிகளை யுடன்பூட்டியுள்ளார்.

சான்றாக—''அந்தி சினந்ததும் முந்தைய ஆடையை மாற்றுதல் போல்'' (காதலின் இரவு) என்ற உவமானம் ஏற்கெனவே பல கவிஞர்களின் வெளிப்பாடாக முத்திரை பதித்துள்ளது.

''விண்முதல் மண்வ ரைக்கும்
வியக்கும் உன் மேனி தன்னைக்
கண்ணிலே காண்பேன்; நீயோ
அடிக்கடி உடையில் மாற்றம்
பண்ணுவாய் இருளே,''

என்பார் பாவேந்தர் பாரதிதாசன் (அழகின் சிரிப்பு, 1944)

## குயிலின் சுருதி:

''கவிதையில் புதுமை செய்ய விரும்பிய பாரதியார் இசைப் பாடல்களுக்கு முதன்மை தந்தார். பாரதியார் காட்டிய வழியிலேயே இப்பொழுதும் தமிழ்க் கவிதையின் ஒரு பகுதி செல்கிறது.'' (முன்னுரை, குயிலின் சுருதி) என்று ஒத்துக் கொள்ளும் பிச்சமூர்த்தி; பாரதியின் ''குயில் பாட்டு'' போன்ற வெண்கலிப்பா வினத்திலேயே ''குயின் சுருதி''யினையும் மீட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (''கூடுண்டா? குயிலா'' என்று இடையிலோர் இடத்திலும் ஈற்றடி காய்ச்சீரில் முடித்து எடுத்த அடி நிரை ஆசையுடன் தொடங்கும் மூன்று இடங்களிலும் மட்டும் தளை தட்டுகிறது.)

தமது முப்பத்தைந்தாம் வயதில் திருவண்ணாமலை சென்று ரமண மகரிஷியினைச் சந்தித்த பிறகு துறவறம் பூணவும் ஆர்வமேற் கொண்டிருந்த ந.பி அந்தக்காலகட்டங்களில் எழுதின மரபுக் கவிதைகள், காவியங்கள் பலவற்றிலும் வறுமையின் வெடிப்பாக வெளிப்படும் புரட்சி முழக்கமும் நம்பிக்கையும், உழைப் போர் தம் ஓங்கிய குரலும் எதிர்பார்ப்பும் விஞ்சி நிற்கக் காணலாம்.

''வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க யாதானுஞ் சற்றே இடமிருதாற் கூறீரோ?'' என்ற விளிப்புடன் பாரதியின் 'குயிற்பாட்டு' நிறைவுறும் போது, ந.பி.யின் ''குயிலின் சுருதி'' முத்தாய்ப்பிடுவதைக் கவனியுங்கள்.

''மாலை வழி மீளும்
பாட்டாளி மக்களுடன்
நாளை வயிற்றை
நனைக்கும் வகையற்றோர்
ஏறுங் குயிலோசை

www.padippakam.com



சண்டை என்பது சமாதானம் பற்றிய பிரச்சினைகளிலிருந்து கோழைத்தனமாகத் தப்பித்தல் ஆகும். —தாமஸ் மான்

மீட்டும் எதிரொலியால்
சேரும் புரட்சிச்
சிசுவை வரவேற்பார்.;
முற்றும் வளர்ந்து
முடிசூடும் பொன்னாளின்
வெற்றிக் கனா காண்பர்,
வேனிற் குயிலிசைக்கும்''

## போரியல்:

அவ்வாறே பரங்கியரிடம் சிறையுண்டு வதங்கின பாரதத் தாயினைத் திரௌபதியாக உருவகித்து பாரதியார் தீட்டியது ''பாஞ்சாலி சபதம்'' என்றால் துரோணர் புதல்வன் அசுவத்தாமனின் வீரப்பிரதாபங்களைப் ''போரியல்'' என்றொரு நிலைமண்டிய ஆசிரியப்பா பிச்சமூர்த்தியினுடையது.

''நரியின் ஊளை நாற்புறம்
ஏறும்
எரியும் கண்கள் இலையிடை
மின்னும்,
எங்கோ அழுகை எழுவது
போல
வெங்கோட் டானொன்
றய்யோ என்னும்
சருகுகள் காற்றில் சர்ரென
ஓடும்
'கறகக்' என்று தவளை கத்தும்
வெளியில் சல்லடை விழிகளின்
ஊடே
ஒளிரும் பல்மர மின்மினி
வெளிச்சம்
எட்ட விழுந்தும் போரில்
எமன்கை
பட்ட பிணங்கள் பாய்ச்சும்
நாற்றம்''

எனப் போர்க்கள அமைதியினை எளிய அகவலில் மீட்டுகிறார் ந.பி.

## குமாஸ்தா பாட்டு:

அத்துடன் பாரதியின் ''சுயசரிதை'' போன்றதொரு கவிதையே இந்தப் புதுக் கவிஞரின் ''குமாஸ்தா பாட்டு''

கும்பகோணம் அரசினர் கல்லூரியில் இளங்கலைத் தத்துவப் பாடத்தில் பட்டம் பெற்று, சென்னை சட்டக் கல்லூரியில் வழக்குரைஞர் படிப்பும் முடித்த பிச்சமூர்த்தி தொடர்ந்து வழக்கறிஞராகவும், கும்பகோண நகரசபை உறுப்பினராகவும் அவ்வாறே இந்துமத அறநிலையப் பாதுகாப்பு வாரியத்தின் அதிகாரியாகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்தார்.

''அன்னை வயிற்றில் சிறையுண்டேன்'' என்று தன் பிறப்பில் தொடங்கி, வேண்டா வெறுப்பாகப் பள்ளிப் பாடத்தில் நுழைந்து:

''நாடி தளர்ந்து 'டீ' உண்டு
நல்ல பரிக்ஷை தேர்ந்திடவே
ஏடு துளைத்தேன் ஜயங்
கொண்டேன்
நரிக்கொம் பேதும்
சிக்கவில்லை''

என்று நொந்து, பெற்றோர்

படிப்பகம்

www.padippakam.com



அன்பு ஓர் ஆயுதம் என்பதைக் கண்டுபிடித்தது இளமைதான்.
— பீட்டர் உஸ்டினோவ்

பேச்சைக் கேட்டு ''கரத்தை நீட்டிப் பெண் கொண்டேன்'' என்பதன் மூலம்,
''இல்லம் நடத்தி அதனூடே
இன்பம் சுயேச்சை நான்தேட
அல்லும் பகலும் பணமென்னும்
அரவம் என்னைச் சூழ்ந்திடவும்
தில்லும் மல்லும் திரிசமனும்
திணிந்த உத்யோ கத்துறையில்
மெல்லப் புகுந்து வேர்தேடி,
மேலும் மேலும் துயருற்றேன்''
என்றும் வருந்தும் ந.பி.—
''வஞ்சம், வெகுளி, மனத்தாங்கல்—வறியன் செய்கைக்கவமானம்—லஞ்சம், சிறுமை, குருட்டெண்ணம்— லாபம் தனக்கு மற்றோரைக் கஞ்சத்தனமாய் நடப்பித்தல்— இவையே கண்டேன்'' என்று ஆதங்கப்படுகிறார்.

வாழ்வில் எதிர் கொண்ட போராட்டங்கள், இன்னல்கள் மூலமாகத் தம்மை ஓர் மிதவாதப் புரட்சிக் கவியாக வரிந்து கொண்டு அப்பாட்டினை முடிக்கிற விதம் இது.

''கருப்பை விட்டு வெளிஏறக்
கடுமை மிகுந்த வலிஉண்டேல்
நெருப்பை நெஞ்சில்
எழவைக்கும்
வறுமை நீங்க வழிஇலையோ?
அருங்கைச் செல்வி
மண்அன்னை
அவனிக் கீயும் எண்திருவை
விரும்பும் வகையில்
பொதுவாகப்
பகிரா விட்டால் விடிவேது?''
என்று பொதுவுடைமை, சமப் பங்கீடு எனும் சீர்திருத்தக் கருத்துக்களின் ஊடாகவும் தம்மை வெளிப்படுத்திக் கொள்கிறார் பிச்சமூர்த்தி.

## அனங்கன் பாட்டு:

மாசிமாதப் பௌர்ணமி நாளில் கிராமப்புறங்களில் நடைபெற்று வந்த காமதகனப் பண்டிகையின் அடிப்படையில் ரதி, மன்மதக் கதை ஒன்றினை 'அனங்கன் பிறப்பு' எனப் படைத்திருக்கிறார் ந.பி.
''அந்த ரத்தி லங்குகோளம்
யாவுமே
சொந்த சக்தி யற்று வானில்
தொங்கினும்
சந்த முற்ற பாவை யென்றி
சைந்திடல்
சுந்த ரன்தொ டுத்த வாளி
சூழ்ச்சியோ?''
என்று பாடும் இக்கவிஞரின் உள்மனதில் சிவவாக்கியச் சித்தரின்,
''அண்டம் ஏழும் உழலவே
அனந்த யோனி உழலவே
பண்டைமால், அயனுடன்
பரந்து நின்று உழலவே
எண்டிசை கடந்து நின்ற
இருண்ட சக்தி உழலவே
அண்டரண்டம் ஒன்றதாய்
ஆதிநட்டம் ஆடுமே''
என்கிற அருளாட்சியே வியாபித்திருக்கக் காண்கிறோம்.

''வேதாந்தி என்று பலராலும் அவர் சொல்லப்பட்டிருக்

படிப்பகம்

www.padippakam.com



இளைய தலைமுறையினர் என்ன சொல்கிறார்கள் என்புதை நீ கேட்க முடியாத போது, அவர்களின் குரலை விடவும் உன்னை வசப்படுத்தக் கூடியது வேறென்ன இருக்க முடியும்!

—லோகன் பியர்சல் ஸ்மித்

கிறார். வேதாந்தியாகத் தன்னைக் கற்பனை செய்துகொண்டிருப்பவர்களின் பட்டியலில் இந்திய ஜனாதிபதியிலிருந்து முடிச்சுமாறி வரையிலும் இருக்கிறார்கள். இது போன்ற ஒற்றை வார்த்தைகள் எந்தப் படைப்பாளியின் குணங்களையும் விவரிக்கத் தகுதியானவை அல்ல.''(ந. பிச்சமூர்த்தியின் கலை - மரபும் மனிதநேயமும்,பக்44) என்றுரைக்கும் திறனாய்வாளர் சுந்தர ராமசாமி ''வாழ்க்கை மீது நம்பிக்கை, சக மனிதன் மீது நேசம், இயற்கையின் மீது ஜீவ உறவு, மதிப்பீடுகள் சார்ந்து வாழ்வதில் உறுதி, இவைதாம், பிச்சமூர்த்திக்கு முக்கியமானவை. இக்குணங்கள் கொண்டவன் அவரைப் பொறுத்த வரையில் ஒரு ஆத்மீகவாதி'' என்பார்.

சராசரி தத்துவவாதியரும், தர்க்கவியலரும், ஆன்மீகச் சிந்தனையாளரும் பலரும் விஞ்ஞானத்தின் எதிர்மறையைப் பொறுத்துக் கொள்வதில்லை. என்றாலும் இவர்கள் எதிர்ப்பது அழிவு தரும் தொழில் நுட்பங்களைத் தானே அன்றி விஞ்ஞானத்தை அல்ல. ஏனெனில் விஞ்ஞானமும் ஒரு தத்துவமே. தொழில் நுட்பம் அதன் தூல வடிவம்.

''மனம் சிவலிங்கத்தைப் போல உருவமுள்ளதென்றும் சொல்ல முடியாது. அற்றதென்றும் சொல்ல முடியாது; மனத்தை அனங்கன் என்று பாவிக்கலாமா? அப்பொழுதும் அனங்கன் என்ற சொல்லுக்குள்ள முழுப் பொருளும் பொருந்தாதே என்ற தடுமாற்றம் ஏற்பட்ட பொழுது மண்ணும் விண்ணும் மற்றய இரட்டைகளாய் விளங்கும் இந்த அண்ட இயக்கத்திற்கு ஈர்ப்பு சக்தி, கவர்ச்சி சக்தி காரணம் என்ற விஞ்ஞான உண்மை கை கொடுத்தது.'' (வந்தவழி, அனங்கன் பிறப்பு) என்று பிச்சமூர்த்தியே அறிவியலை ஏற்றுக் கொள்வதை உணர்கிறோம்.

அதனால் ''தன்னை இதப்படுத்தியுள்ள விஞ்ஞானத்தைப் பற்றி பிச்சமூர்த்தி நினைவு கொள்வதில்லை.'' (ந. பிச்சமூர்த்தியின் கலை : மரபும் மனித நேயமும், பக்46) என்ற சுந்தர ராமசாமியின் முடிவு ஏற்புடைத்தன்று.

''எல்லை யில்அ னங்க னீட்டும்
வெற்றியை
சொல்லைக் கொண்டு
சொல்விஞ் ஞானி உள்ளனோ?'

—என ''அனங்கன் பிறப்பு''— காவியத்தை நிறைவு செய்யும் போதும் ஆன்மீகத்தினைச் சொல்லால் வடிக்க விஞ்ஞானியால் இயலாது என்றே கருதுகிறார்! அவ்வளவே. ●

படிப்பகம்

www.padippakam.com

# கனவைச் சுமந்த மனம்

/அஷோக் ராஜா/



பெரிய மனசு பண்ணி முதலாளி தீபாவளிக்கு லீவு கொடுத்து விட்டார். கடைப் பையன்களுக்குப் பொதுவாக லீவெல்லாம் கிடையாது. இஷ்டமென்றால் அவர்களாக லீவு எடுத்துக் கொண்டு போக வேண்டியதுதான். அவர்கள் திரும்பி வரும்போது கடையில் பதில் ஆள் போடாமலிருந்தால் வேலை உண்டு. இல்லாவிட்டால் வேறு இடம் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

செல்வம் இந்த 'உடுப்பி ராமவிலாசுக்கு' வந்து நான்கு வருடங்களாகிவிட்டன. நான்கு வருடங்களாக அவன் ஒரு நாள்கூட லீவு வேண்டுமென்று கேட்டதில்லை. முதலாளி தமிழ் ஆள்தான். போனவருடம்தான் பொங்கலுக்கு 'ஊருக்குப் போறியா?' என்று கேட்டார். செல்வம் வேண்டாமென்று சொல்லிவிட்டான். முதலாளிக்கு அவன் மேல் தனி பிரியம். கடைக்கு வருகிறவர்களிடத்தில் சிரித்த முகத்தோடு அவன் பரிமாறுவதையும், சில கஸ்டமர்கள் செல்வத்தின் டேபிளைத் தேடிச் சென்று சாப்பிடுவதையும் அவர் கவனித்திருக்கிறார். சில சமயம் பக்கத்திலிருக்கிற 'சந்திரபவ'னுக்கு காப்பி சாப்பிடப் போகும்போது அவர் கல்லாவைக்கூட நம்பி விட்டுப் போவதுண்டு. ஒரு தப்பு சொல்ல முடியாது.

செல்வம் சினிமா ஆசையில் பட்டணத்துக்கு ஓடிவந்தவன். சினிமாவில் என்ன செய்வாய் என்று கேட்டால் எதுவும் சொல்லத் தெரியாது. ஏதோ, சினிமாவில் சேர வேண்டும். அவ்வளவுதான். வந்த புதிதில் வடபழனியில் ஒரு கடையில் வேலை செய்து கொண்டு போகிற வருகிற கார்களையெல்லாம் ஏக்கம் ததும்பிய விழிகளோடு பார்த்துக்கொண்டிருப்பான். காரில் போகிறவர்கள் எல்லோருமே சினிமாக்காரர்கள் என்றுதான் நினைப்பு. ஒருமுறை ஸ்டுடியோவுக்குள் போக முயன்று வாட்ச்மேன் விரட்டியதில் திரும்பி வந்துவிட்டான். அந்தக் கடையும் அவனுக்கு ஒத்து வரவில்லை. அப்போதுதான் அஜீஸ் பழக்கமாகி இங்கே கொண்டுவந்து சேர்த்துவிட்டான்.

இந்த முறைகூட செல்வத்துக்கு ஊருக்குப் போக வேண்டுமென்று தோன்றவில்லை. ஊரில் உள்ள அப்பாவிட

www.padippakam.com



சூரிய மண்டலத்தின் பைத்தியக்காரக் கிடங்கு இந்த பூமி.
—சாமுவெல் பார்க்ஸ் காட்மென்

மிருந்து எத்தனையோ தடவை வரச்சொல்லி கடுதாசி வந்த போதும் அவன் போகவில்லை. ஊருக்குப் போனால் 'நல்ல நெலைமை'யோடுதான் போக வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தான். வள்ளிக்காவுக்கு இந்த முறை பெண் குழந்தை பிறந்திருக்கிறது என்று போன லெட்டரில் அப்பா எழுதியிருந்ததைப் பார்த்ததும் ஊருக்குப் போக வேண்டுமென்று ஆசை வந்துவிட்டது.

அவனுக்கு வள்ளிக்காவை ரொம்பப் பிடிக்கும். அவன் சிறுவனாய் இருந்தபோது வள்ளிக்காவுக்குக் கல்யாணம் முடிந்துவிட்டது. பக்கத்து ஊர்தான். வள்ளிக்கா அடிக்கடி வீட்டுக்கு வநதுவிடுவாள். வரும்போது ஆப்பிளும், இனிப்பு பலகாரமும் வாங்கி வருவாள். வள்ளிக்கா வீட்டுக்கு வந்தாலே வீட்டுக்கே களை வந்துவிட்ட மாதிரி இருக்கும். அப்பாவின் முன்கோபமெல்லாம் அப்போது எங்கேயோ போய்விடும். அவள்தான் வீட்டுக்கு முதல் வாரிசு என்பதால் அப்பா அவளிடம் மிகவும் கனிவாக இருப்பார். அவளை 'என்னடா கண்ணா?' என்றுதான் கூப்பிடுவார். அவர் அப்படிக் கூப்பிடுவதைப் பார்க்க சந்தோஷமாக இருக்கும்.

வள்ளிக்காவுக்கு முதல் இரண்டும் பையன்களாகப் பிறந்து விட்டதில் கொஞ்சம் வருத்தம்தான். ஒரே ஒரு பெண் குழந்தை இருந்தால் நன்றாக இருக்குமென்று அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருப்பாள்.

இப்போதுதான் அவளுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. வள்ளிக்கா ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பாள்.

செல்வம் குளித்து முடித்து நீவி வைததிருந்த சட்டையை அணிந்து கொண்டான். போன தீபாவளிக்கு முதலாளி எடுத்துக் கொடுத்தது போடாமலே வைத்திருந்ததால் புது மெருகு அப்படியே இருந்தது. அஜீஸின் பெட்டியல்ருந்து பவுடர் எடுத்துப் போட்டுக் கொண்டான். கையகலக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டபோது அவனுக்கே கொஞ்சம் பெருமையாக இருந்தது.

மாடியிலிருந்து பையை எடுத்துக்கொண்டு இறங்கி வந்தான். முதலாளி அவன் மேக்கப்பைப் பார்த்து ''அட! யாருடா இது? நம்ம செல்வமா!'' என்றார். அவன் சிரித்துக்கொண்டே உள்ளே போய் மாஸ்டரிடம் சொல்லிவிட்டு வந்தான். அஜீஸ், சேகர், முனுசாமி எல்லோரும் ஏக்கமாக அவனை வழியனுப்பினார்கள். முதலாளியிடம் வந்தான்.

''போய்ட்டு எப்ப வர்றே,

படிப்பகம்

www.padippakam.com

செல்வம்?''

''ஒரு வாரத்துல வந்துர்றேன் முதலாளி.''

''ஒரு வாரமா? நாலு நாள்ல வாடா. உன்னை விட்டா கடையைப் பாத்துக்க ஆள் இல்லை.''

செல்வம் பதில் பேசாமல் இருந்தான்.

''மாம்பலத்துல ஒரு ஓட்டல் ஆரம்பிக்கப் போறேன் செல்வம். அதுக்கு உன்னைத்தான் சூப்பர்வைசரா போடலாம்னு இருக்கேன். போய்ட்டு சீக்கிரம் வந்துடு.''

''நெஜம்மாவா முதலாளி?''

''பின்ன என்ன பொய்யா சொல்றேன்? நீ வாடா. அந்தக் கடைக்கி நீதான் ஆல் இன் ஆல்''

செல்வம் நம்ப முடியாமல் அவரையே வாய்பிளந்து பார்த்தான். அவன் ஒரு கடையை நிர்வகிக்கப்போகிறான்! அதை நினைத்துப் பார்க்கவே பிரமிப்பாக இருந்தது. முதலாளி கல்லாவிலிருந்து ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்து, ''வீட்டுக்கு ஏதாவது வாங்கிட்டுப் போடா செல்வம்'' என்றார்.

கடையை விட்டு வெளியே வந்த பின்னும் முதலாளி பேசியதிலேயே மனம் இருந்தது. முதலாளி சொன்னதைச் செய்யக் கூடியவர்தான். ஊருக்குப் போனதும் நான்கு நாட்களில் திரும்பி வந்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். பஸ் பிடித்து பாரிஸ் வந்து சேலம் போகின்ற பஸ்ஸில் ஏறிக்கொண்டான்.

ஊர் நிறைய மாறிப்போய் விட்டதாக அப்பா எழுதி இருந்தார். கெமிக்கல் கம்பெனிக்காகப் போட்டிருந்த தண்டவாளங்களையெல்லாம் எடுத்துவிட்டு, இப்போது ரயில்வே குவார்ட்டர்ஸ் கட்டிவிட்டார்களாம். ஊருக்கு வருவதென்றால் இப்போது காளியம்மன் கோயிலைச் சுற்றிக் கொண்டுதான் வரவேண்டுமாம். மில்லும் ஸ்ட்ரைக்கில் நின்றுபோய் விட்டதாம். அதனால் நிறைய பேர் தெர்பலில் கூலிவேலை செய்யப் போய் விட்டார்களாம் மேலத்தெரு சின்னையன் கடன் தொல்லை தாங்க முடியாமல் தூக்கில் தொங்கிவிட்டானாம். ஊரே இருட்டாக இருக்கிறது. கரண்ட் பில் கட்டாததால் இப்போது எல்லோருடைய வீட்டிலும் லாந்தர்தான். ரகு போலீஸ் வேலையில் சேர்ந்திருக்கிறானாம்.

சசிகலா இந்நேரம் எப்படி இருப்பாள்?

நன்றாக வளர்ந்திருப்பாள். பதினஞ்சு, பதினாறு வயதிருக்கும். அப்போதே படிப்பில் ஓட்டை. இப்போது வீட்டில் சும்மாதான் இருப்பாள். அப்போதெல்லாம் வள்ளிக்கா ஊருக்கு வந்துவிட்டால் போதும், உடனே சசிகலாவும் ஓடிவந்து விடுவாள். அதுவும் செல்வம் வீட்டிலிருக்கிற சமயமாகப் பார்த்துக்கொண்டு வருவாள். வள்ளிக்கா முன்னிலையில் அவனை வம்பிழுத்துக் கொண்டே இருப்பாள். வள்ளிக்காவுக்கும் இது தெரிந்து

படிப்பகம்

www.padippakam.com

தானிருந்தது. அவள் போனதும், செல்வத்தை அழைத்து, ''என்னடா! சசிகலாவைக் கட்டிக்கிறியா?'' என்பாள். செல்வத்துக்கு வெட்கம் வந்துவிடும். பதில் சொல்லாமல் ஓடிப் போய் விடுவான்.

பையில் அம்மாவுக்கும் வள்ளிக்காவுக்கும் புடவை வாங்கி வைத்திருந்தான். குழந்தைக்கு விளையாட்டுக் காட்ட கிலுகிலுப்பை கூட வாங்கினான். அப்பாவுக்கு வேட்டி விலை கேட்ட பிறகு எதுவும் வாங்கவில்லை. சசிகலாவுக்கு வளையலும், புது டிசைனில் தோடும் வாங்கி பெட்டியில் துணிக்கடியில் ஒளித்து வைத்திருந்தான். ஊருக்குப் போனதும் ஜாக்கிரதையாக எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.



சேலம் வந்தபோது மணி மூன்றாகிவிட்டது. மேட்டூர் பஸ்ஸெல்லாம் பழைய பஸ் ஸ்டாண்டுக்குப் போய்க் கூட்டத்தோடு திரும்பி வந்து கொண்டிருந்தன. சேலத்தில் ஏதோ அரசியல் தலைவரின் கூட்டமாம். எல்லா பஸ்ஸிலும் நல்ல கூட்டம். செல்வம் முண்டியடித்துக் கொண்டு ஏற முயன்றான். பெரிய பையை வைத்துக் கொண்டு ஏறுவது அத்தனை சுலபமாக இல்லை. அப்படியும் ஒரு மாதிரி சிரமத்தோடு உள்ளே புகுந்துவிட்டான். மூச்சு முட்டியது அவனுக்கு. யாரோ அவனை முழங்கையில் தாடையில் இடித்தார்கள். ஒருவர் பெட்டியைத் தூக்கி மேலே வைக்க முயன்றபோது பின்தலையில் இரண்டு மூன்று முறை இடித்தது. பயங்கரமாக வலித்தது. திரும்பிப் பார்த்து முறைக்கக்கூட முடியவில்லை. தோளிலிருந்த பையை கீழே வைப்பதற்கு இடமேயில்லை. அவனே ஒற்றைக் காலில்தான் பஸ்ஸில் நின்று கொண்டிருந்தான். அவனைக் கடந்து உள்ளே போனவர் செல்வத்தின் பையையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போனார். பையைக் காப்பாற்றுவதே பெரும்பாடாக இருந்தது. யாரோ ஒரு கிராமத்து ஆள் அவனது காதருகில், ''காளீம்மா...ஏறிட்டியா? புள்ளைங்கெல்லாம் எங்கே?'' என்று கத்தினான். கிராமத்துப் பெண்கள் கூட்டம் அப்போதுதான் பிறந்த கோழிக்குஞ்சுகள் மாதிரி கீச் கீச் சென்று கத்திக் கொண்டிருந்தது. உள்ளே ஏறிய கண்டக்டர், ''மேச்சேரியில் பஸ் நிக்காது. மேச்சேரி டிக்கெட்டெல்லாம் இறங்கிடுங்க,'' என்று குரல் கொடுத்தார். ஏறியவர்களில் சிலர் முணுமுணுத்துக் கொண்டே இறங்கினார்கள். ஏறுகிறவர்களுக்கும் இறங்குகிறவர்களுக்கும் இடையில் செல்வத்தின் பை அகப்பட்டு ஆளுக்கொரு

படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் எவ்வளவுக்கெவ்வளவு தங்களை விடுவித்துக் கொள்ள முயல்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு சந்தோஷத்தைத் தொலைத்து விடுகிறார்கள். —ப்ரிகிட் பர்டாட்

பக்கமாய் இழுபட்டது. அவனது காதருகில் பட்ட மூச்சுக் காற்றில் சாராய நெடி அடித்தது. இனிமேல் ஊர்ப் பக்கமே வரக்கூடாது என்று நினைத்துக் கொண்டான்.

ஓமலூரில் இன்னும் கூட்டம் அதிகமாயிற்று. எங்கேயாவது ஒரு சீட்டில் சாய்ந்து நிற்க இடம் கிடைக்குமா என்று தேடினான். கால் வலித்தது. டிரைவர் பற்றில்லாத ஞானி மாதிரி நிதானமாக ஓட்டுவதைப் பார்த்ததும் அவனுக்கு எரிச்சலாக வந்தது.

மேட்டூர் வருவதற்கு ஒன்றரை மணி நேரம் ஆகிவிட்டது. செல்வம் பஸ்ஸிலிருந்து இறங்கினான். ஊரில் ரொம்ப நாளைக்குப் பிறகு கால் வைப்பது சிலிர்ப்பாக, பரவசமாக இருந்தது. பஸ்ஸில் கசங்கிப் போயிருந்த சட்டையை நீவி விட்டுக் கொண்டான். தலை வாரியவாறே பஸ் ஸ்டாண்டில் தெரிந்த முகம் ஏதாவது தென்படுகிறதா என்று பார்த்தான். நேற்று நடைபாதைக் கடையில் வாங்கியிருந்த கறுப்பு கூலிங் க்ளாஸை எடுத்து அணிந்து கொண்டு நடந்தான்.

ஊர் நெருங்கியது. எல்லையிலேயே ஊர் மாறிப் போய் விட்டதற்கு அடையாளமாக சாராயக்கடை இருந்தது. சினிமாப் பாட்டை சப்தமாகப் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஊர் பொதுபைப்பில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த பெண்கள் அவனை ஆச்சர்யமாகப் பார்ப்பதை உணராதவன் மாதிரி நடந்தான். நிறைய பெட்டிக்கடைகள் இருந்தன. கோயிலுக்குப் புதிதாகத் தேர்கூட செய்திருந்தார்கள். அவன் கோயில் திருவிழாவின் போதெல்லாம் சாமி ஊர்வலத்தோடு கையில் வேப்பிலை பிடித்து ஆடிக் கொண்டே வருவான். ஒவ்வொரு வீட்டில் இருந்தும் ஒரு குடம் தண்ணீர் சாமியைத் தூக்கிக்கொண்டு வருபவர்களுக்கு ஊற்றிவிட்டுப் போவார்கள். செல்வமும் அங்கே ஓடிப் போய் நன்றாக நனைத்துக் கொள்வான். அவனது ஆட்டம் பிரமாதமாக இருக்குமென்று எல்லோரும் சொல்வார்கள். அவன் ஜோடி சேர்ந்தெல்லாம் ஆடமாட்டான். தனியாகத் தெரிகிறமாதிரி, சுறுசுறுப்பாக ஆடிக்கொண்டு வருவான். தாளத்திற்கேற்ப அவன் போடும் 'ஸ்டெப்' பார்ப்பதற்கு நளினமாக இருக்கும். செல்வம் ஆடியவாறே கூட்டத்தையும் ஒரு கண்ணால் பார்த்

படிப்பகம்

www.padippakam.com

துக் கொள்வான். சசிகலாவின் வீட்டிற்கருகில் வரும்போது இன்னும் சுறுசுறுப்பாய் புது ஸ்டெப்பெல்லாம் போட்டு ஆடுவான். சசிகலா வராந்தாவில் கம்பிகளுக்குப் பின்னாலிருந்து அவனையே பார்த்துக் கொண்டிருப்பாள். அவளது முகத்தில் எப்போதும் இருக்கும் குறும்பெல்லாம் அப்போது இருக்காது. அவள் பக்தியோடு அவனைப் பார்த்துக் கொண்டிருப்பது அவனுக்கு ரொம்பவும் பெருமையளிப்பதாக இருக்கும்.

கோயிலைச் சுற்றிக் கடையெல்லாம் கட்டி விட்டிருந்தார்கள். ஸ்கூலுக்கு இரண்டு மூன்று கட்டிடங்கள் வந்துவிட்டன. முன்பு ரேடியோ வைத்திருந்த ரூமில் இப்போது கறுப்பு வெள்ளையில் டி.வி. வைத்து இருந்தார்கள். அவன் 'மூனு குண்டும்' 'எட்டு கால் பாரியும்' ஆடிக்கொண்டிருந்த இடத்தில் இப்போது கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். செல்வம் வீட்டிலிருந்து யாரேனும் பார்க்கிறார்களா என்று கவனித்த வண்ணம் நடந்துவந்தான். அவனது வீட்டிலிருந்து பார்த்தால் இந்த ரோடு முழுவதும், பொதுக் குழாய் வரையிலும் தெரியும். இப்போது யாரோ வாசலில் வந்து நிற்பது மாதிரி தெரிந்தது. வள்ளிக்கா புருஷன் போல இருந்தது. அவன் நன்றாகப் பார்ப்பதற்குள் தலை மறைந்துவிட்டது. செல்வம் வேகமாக நடந்தான்.

''இப்பதான் வர்றியா செல்வம்?''

குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். மாதேஸ் நின்று கொண்டிருந்தான். அந்த ஊரில் அவனது ஒரே ப்சத்தாளி மாதேஸ்தான். மாதேஸும் சினிமா பைத்தியந்தான். அவர்களிருவரும்தான் ஒன்றாக சினிமா போவார்கள். மாதேஸ் அவனைவிட நான்கைந்து வருடம் பெரியவன். ஆம்பளையும் பொம்பளையும் கட்டிப் பிடித்துக் கொண்டாலே குழந்தை பிறந்துவிடும் என்று நினைத்துக் கொண்டிருந்த அவனுக்கு மாதேஸ்தான் எல்லாவற்றையும் ரகசியம் போல் சொல்லிக்கொடுத்தான். ஊரில் யாரோடு யாருக்குத் தொடுப்பு என்பதெல்லாம் அவனுக்கு அத்துபடி. மாதேஸுக்கு சினிமாவில் 'சிம்பாலிக் ஷாட்'களின் மீதெல்லாம் ரொம்ப பிரமிப்பு. அதையெல்லாம் செல்வத்திடம் சொல்லி விலாவாரியாக விளக்குவான். அவனது பேச்சைக் கேட்ட பிறகுதான் செல்வத்துக்கும் சினிமா ஆசை வந்தது. தான் பார்த்த படத்தில் இருந்த 'சிம்பாலிக் ஷாட்'களைப் பற்றி மாதேஸிடம் பகிர்ந்து கொண்டது பட்டுமில்லாமல் தான் கண்டுபிடித்த அதுபோன்ற ஐடியாக்களையும் சொன்னான். மாதேஸும் முழு மனதோடு அவனைப் பாராட்டிச் சொன்னான். அதெல்லாம் வளர்ந்து பெரிய கனவானதும் செல்வம் ஒரு நாள் இரவு சென்னைக்கு பஸ்

படிப்பகம்

www.padippakam.com

லேறினான்.

''என்ன மாதேஸ்! எப்படி இருக்கே?''

''ஏதோ இருக்கேன் செல்வம். மெட்ராஸ்லியா இருக்க?''

''ஆமா. மெட்ராஸ்லதான் இருக்கேன். போய் ஆறேழு வருஷமாச்சு.''

''இப்ப என்ன பண்றே?''

''பாரதிராஜா இல்லை... அவர்கிட்டதான் நான் அஸிஸ்டெண்டு.''

''பாரதிராஜாவா?'' மாதேஸ் திகைத்துப்போய்க் கேட்டான்.

''அப்போ எல்லா நடிகர் நடிகைகளையும் பார்த்திருப்பே இல்லே.''

''ஓ! ரேவதி, ராதா எல்லாரும் எங்கிட்ட நல்லா பேசுவாங்க.''

மாதேஸ் அவனை பொறாமையோடு பார்த்தான். அவன் மேலும் ஏதேனும் கேட்டுவிடப் போகிறானோ என்று செல்வத்துக்கு உள்ளூற பயம் வந்தது.

''சரி. இப்பதான் வீட்டுக்குப் போயிகிட்டிருக்கேன். அப்புறமா வா. காட்டுக்குப்போய் உக்காந்து பேசலாம்.''

செல்வம் அவசரமாகத் திரும்பினான். எதிரே வந்த அந்தப் பெண் கொஞ்சம் தெரிந்த முகமாக இருந்தது. அவனைப் பார்த்ததும் அடையாளம் கண்டு கொண்ட மாதிரி சிரித்து,

''என்ன செல்வம்! சௌக்கியமா?'' என்றாள்.

அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

சசிகலாதான். முகத்தில் பெரிய மனிதக்களை வந்திருந்தது. தலை நிறைய மல்லிகைப் பூவும், கனகாம்பரமும் வைத்திருந்தாள். கையெல்லாம் கண்ணாடி வளையல்கள். அரளிப் பூவின் கருஞ்சிவப்பு இதழ் மாதிரி முகத்தில் ஒரு மினுமினுப்பு. லேசாக பூசினாற் போல இருந்தாள்.

''இப்பத்தான் ஊருக்கே வர்றியா செல்வம்?''

''..ம், ஆமா.''

''கல்யாணத்துக்கு ஏன் வரலை?''

சசிகலாவின் பக்கத்தில் ஒரு ஆள் குண்டாக நின்று கொண்டிருப்பதை அப்போதுதான் பார்த்தான். சசிகலா அவன்பதிலை எதிர்பார்க்காத மாதிரி, ''சினிமாவுக்குப் போறோம். அவருதான் எங்க வீட்டுக்காரரு. துபாய்ல இருக்காரு'' என்று பெருமையாகச் சொன்னாள்.

செல்வம் ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் சசிகலா, ''இந்தா வந்துட்டேங்க'' என்று கிளம்பினாள்.

வீட்டு வாசலில் இப்போது வள்ளிக்கா தெரிந்தாள். அப்பாவும் வெளியே வந்து நின்று அவனை ஆர்வமாகப் பார்ப்பது தெரிந்தது. வள்ளிக்கா பையன்கள் இரண்டு பேரும் அவனை நோக்கி ஓடிவந்தார்கள். பெரியவன், ''பையை குடுங்க மாமா,'' என்று வாங்கிக் கொண்டான். பையைத் தூக்க முடியாமல் திணறுவதைப் பார்த்து அதைச் செல்வமே வாங்கிக் கொண்டான். இருவரும் அவன் கையைப் பற்றிக்கொண்டு நடந்தார்கள்.

வள்ளிக்கா மலர்ச்சியாக அவனது கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டாள். அவளது கண்களில் நீர்த்திரை இருந்தது. அப்பா நெகிழ்ச்சியோடு

www.padippakam.com

அவனைப் பார்த்தார். செல்வம் அவரைப் பார்த்து சிநேகத்தோடு புன்னகைத்துவிட்டு, உள்ளே போனான். அம்மா ஓடிவந்து அவனைக் கட்டிக்கொண்டு அழுதாள். லேசாகக் கண் கலங்கியது அவனுக்கு. வள்ளிக்கா உதட்டை மடித்துக் கடித்துக்கொண்டு தூணருகில் நின்று கொண்டிருந்தாள். பாட்டி படுக்கையிலிருந்து தள்ளாட்டமாய் நடந்து வந்து கையைக் கண்ணுக்கருகில் வைத்துப் பார்த்து, ''எங்களைத் தவிக்கவுட்டுட்டுப் போயிட்டியே ராசா. இப்பதான் எங்க நெனப்பு வந்ததா? இப்பிடி எளச்சுப் போயிட்டியே ராசா'' என்று குரல் கம்மச் சொன்னாள். அம்மாவின் அணைப்பிலிருந்து விடுபட்டு, ''நல்லா இருக்கியா, பாட்டி?'' என்றான்.

திண்ணையில் உட்கார்ந்து பையைப் பிரித்து அம்மாவுக்கும் வள்ளிக்காவுக்கும் புடவையை எடுத்துக் கொடுத்தான். பையன்கள் பொம்மைக் காரை எடுத்துக் கொண்டு 'சர் சர்' என்று ஓட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

''எங்க வள்ளிக்கா குழந்தை?''

வள்ளிக்கா உள்ளேபோய்த் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தாள். அசப்பில் அவளை மாதிரியே இருந்தது.

''போடா போடா! பெரிய மனுஷன் சொல்லீட்டான். அதுக்குள்ள முக ஜாடையெல்லாம் தெரியாது,'' என்றாள் வள்ளிக்கா.

குழந்தையை மடிமேல் வைத்துக் கொண்டு பெட்டிக்கு அடியில் கை விட்டு ஒளித்து வைத்திருந்த தோடையும் வளையலையும் எடுத்து வள்ளிக்காவிடம் கொடுத்தான்.

''இந்தா வள்ளிக்கா. உம் பொண்ணு பெரியவளானதும் போட்டுவுடு'' என்றான்.

''அதுக்குள்ள சீரா கொடுக்கற? இதெல்லாம் கொடுத்து சுளுவா பொண்ணைக் கட்டிக்கலாம்னு பாக்கறியா?'' என்றாள் வள்ளிக்கா.

''ஆமா, பொல்லாத பொண்ணு. இந்த மண்டை மூக்கிய எவன் கட்டுவான்? தேடினாலும் கிடைக்காது.''

''இந்தக் தங்கக் கட்டியக் கட்டிக்கறத்துக்கு குடுத்து வச்சிருக்கணும்டா செல்வம்.''

''தங்கக்கட்டியா? அப்படின்னா இனிமே தொட்டில்ல போடாதே. பீரோவுல வச்சுப் பூட்டி வை. எவனாவது கடத்திகிட்டுப் போய் அடமானத்துக்கு வச்சுறப் போறான்.''

அம்மாவும் வள்ளிக்காவும் சிரித்தார்கள். அப்பா ஈசிசேரில் படுத்துக் கொண்டிருந்தவர் உதட்டுக்குள் சிரித்துக்கொண்டார். வள்ளிக்கா அவனது முடியைச் செல்லமாகப் பிடித்து இழுத்து, ''இந்தக் கலகலப்பு வீட்டை விட்டுப்போய் எத்தனை நாளாச்சு தெரியுமாடா?'' என்றாள் நெகிழ்ச்சி பொங்க.

செல்வம் களைப்பாக அம்மாவின் தோளில் சாய்ந்து கொண்டான். வள்ளிக்கா குழந்தையை வாங்கிக்கொண்டு உள்ளே போனாள். வரும்போது முதலாளி சொன்னது நினைவுக்கு வந்தது. மறுபடியும் திங்கட் கிழமை ஊருக்குப் புறப்பட வேண்டியிருக்கும் என நினைத்தபோது நீண்ட பெருமூச்சு எழுந்தது.

செல்வம் அப்படியே சரிந்து அம்மாவின் மடியில் படுத்துக் கொண்டான். ○

www.padippakam.com

—முன் உள் அட்டை தொடர்ச்சி.

அவர் கண்ட சமத்துவ சமுதாயம் ஒப்பற்றது.

இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்;
தனியொருவனுக் குணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

என்று ஆவேசமாகப் பாடிய பெருமகனார் அவர். அந்தச் சமுதாயமே சமத்துவத்தின் உருவாய் நம்மை வாழ்விக்கும்.

பாரதியார் வாழ்நாள் முழுவதும் வறுமையில் இடர்ப்பட்டார். ஆனால், செல்வம் வேண்டுமென்று என்றைக்கும் வேண்டிக்கொண்டவரல்லர். தெய்வத்திடமும் வேண்டியதில்லை. 'செல்வம் கொடு' என்று வேண்டாமல் 'வலிமையைக் கொடு' என்று எவன் வேண்டுகிறானோ அவனே உண்மையான பக்தன். பாரதியார் மெய்யான பக்தர்.



அவருங்கூட ஒரு வரம் வேண்டினார்; அவருடைய அன்புத் தெய்வமான பராசக்தியிடம் உரிமையோடு வேண்டினார். வேண்டியது ஒரு காணி நிலம்; அக்காணி நிலத்தில் அழகிய தூண்கள் அமைந்த ஒளி பொருந்திய மாடம் ஒன்று; அருகில் ஒரு கேணி; கேணியைச் சுற்றிச் சில தென்னை மரங்கள். வானத்தில் நிலா; பூங்குயிலின் இனிய கீதம்; அதைச் சுமந்து வரும் தென்றல்; அந்த இன்பமான சூழலில் பாடிக் களித்திருக்க ஒரு பத்தினிப் பெண்; அவர்கள் இல்லறக் கோட்டையைத் தெய்வமே காவல் புரிய வேண்டும். இத்தனையும் பெற்று அவர் செய்யப் போவது என்ன? மேலும் என்ன கேட்கிறார்?

—என்றன்

பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.

அவரே மகா கவிஞர் பாரதியார்.

—செப்டம்பர் 12ஆம் நாள் மகாகவியின் நினைவு நாள்.

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, Sep. 1992. Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY In TAMIL R. Dis. 8479/90


# ADVERTISEMENT TARIFF

| | |
|---|---|
| Back Cover (Black & White) | Rs. 1250/- |
| Cover inside I & II each | " 1000/- |
| Full Print Page | " 750/- |
| Half Page | " 400/- |

Add 50 % for each additional colour upto 3 colours.

**MECHANICAL DATA**

| | |
|---|---|
| Overall Size of the Monthly: | 21.5 cmX 14 |
| Print Area | 17.5 cm X 10.5 cm |
| Printing Process: | Letter Press |
| Material preferred: | Matter to be composed & Blocks |

**Your Advertisement in our Monthly is one step forward to help spread Creative Literature in good harmony.**

**சந்தாதாரர் ஆகுங்கள்**
**சந்தாதாரர் ஆக்குங்கள்**


படிப்பகம்